Saturday
# மெயில்
01 - 15
09-01-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



# வருடம் ஒரு கோடி 30 இலட்சம் குறைமாத பிரசவங்கள்

உலகளாவிய ரீதியில் குறைமாதப் பிரசவங்கள் (Preterm births) தொடர்பான ஆய்வறிக்கையொன்றை உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) முதற்தடவையாக வெளியிட்டிருக்கிறது.

உலகம் பூராகவும் ஒவ்வொரு வருடமும் சுமார் 1 கோடி 30 இலட்சம் குறைமாதப் பிரசவங்கள் இடம்பெறுவதாகவும் இதில் அநேகமாக ஒரு கோடி 10 இலட்சம் பிரசவங்கள் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் இடம்பெறுவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2005 ஆம் ஆண்டு 1 கோடி 29 இலட்சம் குறைமாதப் பிரசவங்கள் இடம்பெற்றன. இந்த எண்ணிக்கை உலகளாவிய பிறப்பு வீதத்தில் 9.6 சதவீதம் என்பது கலனிக்கத்தக்கது.

குறைப்பிரவசங்களில் 85 சதவீதமானவை ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் நிகழ்கின்றன. சுமார் 50 இலட்சம் குறைப்பிரசவங்களே ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் (மெக்சிக்கோ நீங்கலாக) நிகழ்கின்றன. லத்தீன் அமெரிக்காவிலும் கரிபியன் பிரதேசத்திலும் வருடாந்தம் 90 இலட்சம் குறைப்பிரசவங்கள் இடம் பெறுவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருநிலையில் 37 வாரங்கள் பூர்த்தியாலதற்கு முன்னதாக உலகில் 10 சதவீதமான பிரசவங்கள் நிகழ்ந்துவருகின்றன. இந்த வீதம் மத்திய ஆசியாவைப் பொறுத்தவரை 3.8 சதவீதமாகவும் ஆபிரிக்காவின் தென் பிராந்தியத்தில் 17.5 சதவீதமாகவும் இருக்கிறது.


குறைப்பிரசவங்கள் கர்ப்ப காலத்திலும் பிரசவத்திற்குப் பிந்திய காலத்திலும் ஏற்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை உலகளாவிய பாரிய நெருக்கடியாக அமைந்திருக்கின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் குறிப்பாக ஆபிரிக்காவிலும் ஆபிரிக்காவில் உள்ள நாடுகளே இந்த நெருக்கடியின் பளுவைக் கூடுதலாகச் சுமக்கவேண்டியிருக்கிறது. வடஅமெரிக்காவிலும் குறைமாதப் பிரசவ கால வீதம் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது என்று மேற்படி அறிக்கையை தயாரித்த 9 நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

குறைப் பிரசவத்துக்கான காரணங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது அவசியமானதாகும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.



Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலைக்கழக பிரவேச பரீட்சைகளில் சித்தி பெறாதவருக்கு கிடைத்த நோபல் பரிசு

கடந்த வருடம் இரசாயனவியலுக்கான நோபல்பரிசைப் பெற்ற இந்தியரான பேராசிரியர் வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன் பல வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் உள்ள பிரபல மருத்துவக் கல்லூரியிலும் இந்திய தொழில் நுட்பவியல் நிறுவனத்திலும் (IIT) சேருவதற்கான பிரவேசப் பரீட்சைகளில் சித்திபெறத் தவறினார். இத்தகவலை அவரே இவ்வாரம் பெங்களூரில் தெரிவித்தார்.

பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞான நிறுவனத்தின் வளாகத்தில் ஜே.என்.டாடா கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சொற்பொழிவொன்றை நிகழ்த்திய இராம கிருஷ்ணன் தனது பாடசாலை மற்றும் கல்லூரி வாழ்க்கை ஆரம்பித்த பரோடாவில் இருந்து பி.எச்.டி.பட்டம் பெற்ற அமெரிக்காவின் ஒஹியோ பல்கலைக் கழகம் வரையான பயணத்தை நினைவுமீட்டினார்.

'இந்திய தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் எனக்கு ஒரு ஆசனம் கிடைக்கவில்லை. எனது தாய், தந்தையர் பழையபாணி வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டவர்கள். பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு முன்னதாக பயிற்சி வகுப்புகளில் படிக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை' என்று இராமகிருஷ்ணன் கூறினார்.

தமிழ் நாட்டின் வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியின் புகுமுகப் பரீட்சைக்கும் இராமகிருஷ்ணன் தோற்றியிருந்தார். அதிலும் சித்தியடையமுடியாமல் போய்விட்டது. கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டபிறகு வெளிநாடுகளில் உள்ள 50க்கும் அதிகமான பல்கலைக்கழகங்களில் தொழில் தேடி விண்ணப்பித்தும் கூட ஆரம்பத்தில் ஒரு தொழிலில் சேரக் கூடியதாக இருக்கவில்லை.

சிறுவர் பராயத்தில் இராம கிருஷ்ணனுக்கு விஞ்ஞானத்தைப் படிப்பதில் ஆர்வம் இருக்கவில்லை. ஆனால், அவரின் கணித ஆசிரியரும் விஞ்ஞான ஆசிரியரும் விஞ்ஞானத்தைப் படிப்பதில் அக்கறை காட்டுமாறு அவரை உற்சாகப்படுத்தினர்.

நோபல் பரிசைப் பெறும் எதிர்பார்ப்பில் அல்லது நம்பிக்கையில் யாருமே விஞ்ஞானத்தில் ஆர்வம் காட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் இறுதியில் ஏமாற்றமும் அதிருப்தியுமே மிஞ்சும். பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக விஞ்ஞானத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்று இராமகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

இந்தியாவுக்குத் திரும்பிவரும் திட்டம் இருக்கிறதா என்று பார்வையாளர்களில் சிலர் கேட்டபோது, இல்லையென்றே அவர் பதிலளித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

ஊடகங்களைப் பற்றியும் கணிசமான நேரம் பேசிய இராமகிருஷ்ணன் தனக்கு இவ்வளவு விளம்பரத்தை எதற்காக ஊடகங்கள் கொடுக்கின்றன என்பதை தன்னால் உண்மையில் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றும் தன்னையே தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்திய மாணவர்களுக்கு என்ன ஆலோசனை கூற விரும்புகிறீர்கள் என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, இந்திய மாணவர்கள் பொதுவில் விவேகமானவர்கள் ஆனால், எனது துறையைவிட வேறுவிடயங்களில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான தகுதி எனக்கு இல்லை என்று பதிலளித்தார்.

அடிப்படை விஞ்ஞானத்தில் மாணவர்கள் ஆர்வம் காட்டாமல் இருக்கும் போக்கு இந்தியாவில் மாத்திரம் காணப்படும் ஒன்றல்ல. விஞ்ஞானத்தில் தொடர்ச்சியான ஆர்வம் காட்டுபவர்கள் பொதுவில் சுயநலவாதிகளாக இருக்கமுடியாது. பொது நலன்கள் மீதான அக்கறையே விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப்படையில் அவசியமானதாகும் என்பதே இந்த நோபல் பரிசாளரின் அபிப்பிராயமாக இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வீதிகள் புனரமைக்கப்படாமைக்கு யார் காரணம்...?

மூன்று தசாப்தங்களாக நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாகவிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், இந்த ஆறு மாத காலப்பகுதியில் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்னவென்று பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர். தங்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் கூட இக்காலப் பகுதியில் தீர்க்கப்படவில்லையென்றே அவர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது யாழ். குடாநாட்டு வீதிகள் போக்குவரத்திற்கு ஏற்றவையாகவே இருந்தன. ஆனால், தற்போது யாழ். குடாநாட்டு வீதிகள் அனைத்தும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

யாழ்.-ஏ-9 வீதி,யாழ்-பருத்தித்துறை வீதி, யாழ்-காரைநகர் வீதி,யாழ்-காங்கேசன்துறை வீதி,யாழ்-பலாலி வீதி, யாழ்-பண்ணை வீதி போன்ற அனைத்துப் பிரதான வீதிகளும் ஆங்காங்கே மிக மோசமாகச் சேதமடைந்திருக்கின்றன. இதனூடாகப் போக்குவரத்துச் செய்யும்போது பாரிய நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன.

பிரதான வீதிகள் தவிர, உள்ளக வீதிகள், சிறுவீதிகள் போன்றனவும் குன்றும் குழியுமாகவே உள்ளன.

யுத்த காலத்தில் மக்கள் குடியிருந்த எண்ணிக்கை குறைவென்ற காரணத்தால் நீண்டகாலமாக தீவுப்பகுதி பல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டதாகவே இருந்தது. இதனால் அங்குள்ள வீதிகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் ஒழுங்கில் வீதி, ஊர்காவற்றுறை முகாம் வீதி,காரைநகர் விலாவில் வீதி,காரைநகர் கிழக்கு வீதி போன்ற வீதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அண்மையில் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காரைநகர்-வியாவில் ஐயனார் கோவிலுக்குச் சென்றபோது அவருடைய வாகனம் வியாவில் வீதியினூடாகப் பயணிக்க மிகவும் சிரமங்களை எதிர்நோக்கியதையும் அவதானிக்க முடிந்தது. இவற்றை விட யாழ் நகர் மத்தியிலுள்ள கஸ்தூரியார் வீதி,ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி,பழைய தபாற்கந்தோர் வீதி,ஆஸ்பத்திரி வீதி போன்ற வீதிகளும் ஏறக்குறைய 20 வருடங்கள் திருத்தப்படாத வீதிகளைப்போலப் பாதிப்படைந்திருக்கின்றன.

மேற்கூறப்பட்ட வீதிகளெங்கும் பாரிய கிடங்குகள் மற்றும் குன்று,குழிகள் காணப்படுவதோடு, அவற்றிலிருந்து வெளிக்கிளம்பிய கற்கள் வீதிகளில் பரவியிருக்கின்றன. இவற்றுக்கு வாகனங்கள் வேகமாகச் செல்கின்ற போது வீதிகளில் பரவிக் கிடக்கின்ற கற்கள் அவற்றின் ரயர்களில் பட்டுத் தெறிக்கின்றன. அவ்வேளை, அருகில் மோட்டார் சைக்கிள் அல்லது துவிச்சக்கர வண்டி போன்ற வாகனங்களிலோ நடந்தோ செல்கின்ற பொதுமக்களை இந்தக் கற்கள் பதம் பார்க்கின்றன. வீதிகளில் கிடந்து தெறித்த கற்கள் தாக்கியதால் காயமடைந்த பலர் அண்மைக்காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனைவிட பின்னே வருகின்ற வாகனங்கள் முன்னால் செல்லும் வாகனங்களை முந்திச் செல்ல முற்படுகின்ற போது எதிர்பாராத நிலையில், முன்னே இருக்கின்ற குழிகளுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாக வேண்டியேற்படுகின்றது. இவ்வாறான விபத்துகளால் பொதுமக்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி-நுணாவிலில் இடம்பெற்ற இவ்வாறான விபத்தொன்றில் லொறியில் பயணித்த செல்வராசா நடேஸ்வரன் (வயது 27) என்ற கூலித் தொழிலாளியொருவர் உயிரிழந்தார்.

இதனைவிட வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் வாகனங்களின் ரயர்களும் வாகனப் பாகங்களும் சேதமடைகின்றன. இதனால் வாகனங்களின் இயங்கு காலம் குறைவடைவதாகவும் அடிக்கடி கராஜுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர். மேலும், நோயாளர்கள் எவரும் வாகனங்களில் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

யாழ்நகரிலுள்ள வீதிகள் அனைத்தும் மிக நீண்டகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டவை. நவீன நகர மயமாக்கலுக்கேற்ற வகையில் இவை அமைக்கப்படவில்லை. மேலும், கடந்த 30 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ்நகரை நவீனமயப்படுத்தவோ, வீதிகளைப் புனரமைக்கவோ முடியவில்லை. இதனால் கனரக வாகனங்கள் இந்த வீதிகளைப் பாவிக்கின்றபோது வீதிகள் மேலும் சேதமடைகின்றன.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது தென்னிலங்கையிலிருந்து தினமும் பல கனரக வாகனங்கள் பொருட்களுடன் வருகை தருகின்றன. இந்தப் பாரம் கூடிய கொள்கலன் வாகனங்களைத் தாங்குவதற்கேற்ற நிலையில் குடாநாட்டு வீதிகளோ வடிகால்களோ அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மேற்படி பல கொள்கலன் வாகனங்கள் வடிகால்களுக்கும் மதகுகளுக்கும் மேலாகப் பயணம் செய்தபோது அப்படியே புதைந்த அல்லது அமிழ்ந்த சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன.

மேலும், யாழ்நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதிக்குக் கீழாகவும் மேற்காகவும் அமைக்கப்பட்டிருக்கின்ற நவீன சந்தைக் கட்டிடத் தொகுதிகளை இணைக்கின்ற மேம்பாலமும் மிக நீண்டகாலத்திற்கு முன்னர் கட்டப்பட்டது. அது கட்டப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய கொள்கலன் வாகனங்கள் பயன்பாட்டில் இருக்கவில்லை. ஆனால், தற்போது தென்னிலங்கையிலிருந்து வரும் மிகப்பெரிய கொள்கலன் வாகனங்கள் கஸ்தூரியார் வீதியூடாகப் பயணிக்க முற்படுகின்ற போது மேற்படி மேம்பாலம் தடையாக இருக்கின்றது. இந்த வாகனங்கள் நுழைய முடியாத நிலையிலும் நுழைகின்ற சந்தர்ப்பங்களில் மேம்பாலத்தின் சீமெந்துக் கட்டுகள் உடைந்து வீழ்ந்திருக்கின்றன.

ஒரு தடவை இவ்வாறு பயணிக்க முற்பட்ட கொள்கலன் வாகனமொன்று மேம்பாலத்துடன் உராய்ந்தவாறு தொடர்ந்தும் செல்ல முடியாமல் மிக நீண்டநேரம் தாமதிக்க வேண்டியேற்பட்டது. தற்போது நகரில் வாகனப் போக்குவரத்துகள் மத்தியிலும் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற இ.போ.ச. பேருந்துகளும் தனியார் சிற்றூர்திகளும் தமது போட்டியை நிறுத்தியபாடில்லை.

இவ்வாறான நிலையில், வீதிகளில் பயணிப்போர் தமது உயிரைக் கையில் பிடித்தபடியே பயணிக்க வேண்டியுள்ளது. குடாநாட்டில் அன்றாடம் நடைபெறுகின்ற சிறியதும் பெரியதுமான விபத்துகளுக்கு வீதிகளின் பாதிப்பே பிரதான காரணமென்று கூறப்படுகின்றது.

அதிகமாகியுள்ள நிலையில், மேற்கூறப்பட்டவாறான சந்தர்ப்பங்களில் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், இந்த வீதிகள் மற்றும் வடிகால்களை நகரமயமாக்கலுக்கு ஏற்ற வகையில் உடனடியாகப் புனரமைக்க வேண்டியவர்கள் யாரென்ற கேள்வியெழுந்திருக்கின்றது.

குறிப்பாக யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இருக்கின்ற பல வீதிகளை மாநகர சபையும் பிரதான வீதிகள் உட்பட ஏனைய வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையும் புனரமைக்க வேண்டும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தேர்தல் மூலம் யாழ்.மாநகர சபைக்கு புதிய மேயரும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆயினும் தமது அதிகார எல்லைக்குட்பட்ட வீதிகளையோ கால்வாய்களையோ திருத்துவதில் அவர்கள் அக்கறை காட்டவில்லையென்று மக்கள் கூறுகின்றனர்.

தாங்கள் வெற்றியடைந்தால் யாழ் நகர் சின்னச் சிங்கப்பூராக மாற்றப்படுமென்று கூறித் தேர்தல் பிரசாரம் செய்த ஆளுந்தரப்பினர் தேர்தலில் வென்று ஐந்து மாதங்கள் நிறைவடைந்த போதிலும் அதற்கான முன்னேற்றப்பாடுகள் எதையுமே மேற்கொள்ளவில்லையென்றே மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.


வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளும் இந்த வீதிகளைப் புனரமைப்பது தொடர்பில் அக்கறையற்றவர்களாகவும் ஏனோதானோவென்ற மனப்பாங்கைக் கொண்டவர்களாகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ள இந்த வீதிகளின் புனரமைப்புத் தொடர்பாகவும் புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் தொடர்பாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்திற்குச் சென்றால் உரிய அதிகாரிகள் எவரும் அங்கு இருப்பதில்லை. ஏதேச்சையாக இருந்தாலும் 'எங்களுக்கு வேலை இருக்கு,நாங்கள் இன்றைக்கு பிஸி' என்று கூறிவிட்டுத் தலைமறைவாகின்றனர். தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்கின்ற போதிலும் உரிய அதிகாரிகள் இல்லையென்றே பதிலளிக்கப்படுகின்றது.

'ஆர்.டி.ஏ.ஆக்கள் றோட்டுகளை கொன்றாக் குடுத்துவிட்டு காசு வாங்குவதில் குறியாக நிற்கின்றனரே தவிர, அந்த றோட்டுகளில் அவர்களுக்கு அக்கறையில்லை. கொன்றாக் எடுக்கிறவர்கள் அரைகுறையாக வேலைகளைச் செய்கின்றனர். இதனால் றோட்டுகளெல்லாம் கெதியாகப் பழுதாகுது' என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மீது பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மக்களின் இந்தக் குற்றச்சாட்டில் நிறையவே உண்மை இருக்கின்றது.



**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இம்சை அரசர்களாகிவிட்ட இளைஞர்கள்

யாழ். மாவட்டத்தில் தற்போது பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுவரும் மாணவர்கள் மற்றும் பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கும் - இம்சைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதை எவரும் கண்டுகொள்வதாகவோ, அதனைத் தட்டிக் கேட்பதாகவோ இல்லை.

காலை வேளையிலும் - மாலை வேளையிலும் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றுவரும் மாணவிகளை வீதிகளில் சுற்றித்திரியும் இளைஞர்கள் மிகவும் கேவலமான முறையில் இம்சித்து வருகின்றனர். இவ்வாறு சேஷ்டைவிடும் இளைஞர்களை கண்டும் காணாதவர் போன்று ஏனையவர்கள் அவர்களுக்குப் பயந்து ஒதுங்கிப் போவதும் நாளாந்த கதையாகி விட்டது.

பெண்கள் மீதான சேஷ்டைகள் நகரப் பகுதிகளில் மாத்திரமன்றி கிராமப்புறங்களிலும் பெருமளவில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நகரின் முக்கிய வீதிகளிலும் - சந்திகளிலும் கூட்டம் கூட்டமாகக் கூடும் இளைஞர்கள் இவ்வாறு கும்மாளமடிப்பதும் சேஷ்டைகளில் ஈடுபடுவதும் வேதனை தரும் விடயமாகவே அமைந்திருக்கின்றது. கிராமப்புறங்களில் விளையாட்டுக் கழக வீதியோரங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் கூடும் இளைஞர் கூட்டம், அவ்வழியால் செல்லும் பெண்களுடன் மிகவும் கீழ்த்தரமான கேவலமான வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத முறையில் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

தகாத வார்த்தைகளால் ஏசுதல், வீதிக்குக் குறுக்காக துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்தி நிலைகுலைந்து விழச்செய்தல், கைத்தொலைபேசிக் கமராக்கள் மூலம் போட்டோ எடுத்தல், அவ்வாறு எடுக்கப்பட்ட போட்டோக்களைப் பயன்படுத்தி அவர்களைப் பழிவாங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய இழிவான செயல்களில் ஈடுபட்டு வரும் இவர்களைத் தட்டிக்கேட்க ஆளில்லையா? இவர்களின் அடாவடித்தனத்தை அடக்க முடியாதாவென பெண்களும் யுவதிகளும் கேட்கின்றனர்.

நாட்டுக்கு நல்லது செய்யவேண்டிய இளைஞர்கள் நடுத்தெரு வீதியில் வந்து நர்த்தனம் ஆடுவது முறையற்ற செயல்தானே! இவர்களும் மனிதர்களா? என்று பெரியவர்கள் பேசுவதை கேட்கும்



போது இவர்களின் அட்டகாசத்தின் பாதிப்பு விளங்குகிறது.

பஸ்களில் பயணம் செய்யும்போது பாசாங்கு பண்ணி அங்கச்சேஷ்டை செய்வதும்- அக்கா சொறி என்பதும் அருவருப்பு மிகுந்த செயலாகிவிட்டது. தட்டிக் கேட்க யாரும் முயன்றால் முட்டிமோதும் காளைகளாக மூர்க்கத்தனத்தை காட்டி வருவதும் முடிவற்ற கதையாகி விட்டது என்று பெரியவர்கள் அலுத்துக்கொள்வதையும் அவதானிக்க முடிகிறது.

சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள் பற்றிப் பேசிவருகின்ற நிறுவனங்களும் உயர் மட்ட அதிகாரிகளும் இத்தகைய இளைஞர்களின் செயல்கண்டு - அடாவடித்தனம் கண்டு தட்டிக்கேட்க முன்வருவதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

அத்தோடு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொலிஸாரும்- சமாதானத்தை விரும்பும் பெரியவர்களும் இத்தகைய இளைஞர்களைத் தட்டிக்கேட்க முன்வருவார்களா? என்றும் தங்கள் மீதான இம்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பார்களா? என்றும் பாதிக்கப்படும் பெண்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இம்சைகளிலிருந்து விடுபடவும் நிம்மதியாய் கற்பதற்கும் நீதித்துறையினரும்- பொலிஸாரும் நிரந்தரமானதொரு சட்ட ஒழுங்கை நிலைநாட்ட முன்வருவார்களா? என்று மாணவிகள் கேட்கின்றனர்.

முக்காலமும் உணர்ந்து - முடிவெடுக்கும் பொறுப்பறிந்து முழுமனதுடன் செயற்படவேண்டிய இளைஞர்கள், தங்களுக்கும் தாய் - தங்கையர் உண்டென்பதை மறந்து தப்பாக நடக்கின்றனர்? தட்டிக்கேட்க ஆளில்லையென்றால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பது இதைத்தானோ?

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கு பிரெஞ்சு உளவியல் நிபுணரின் புதியதோர் ஆலோசனை

'பெண்களே உங்கள் கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறாரென்பதை அறிந்தால் அவர்மீது ஆத்திரம் கொண்டு கத்தியை எடுத்துக்கொண்டு துரத்தாதீர்கள். மணவாழ்க்கைக்குப் புறம்பான காதல் தொடர்பு உங்களுடனான தாம்பத்திய வாழ்வில் கணவர் திருப்தியடையவில்லை என்று அர்த்தமாகிவிடாது. மாறாக உங்கள் மணவாழ்வு ஆரோக்கியமாக இருக்கிறது என்பதன் அடையாளமாக அதைக் கருதுங்கள்".

எந்தப் பெண்மணியுமே எதிர்பார்த்திராத இந்த ஆலோசனை பிரான்ஸில் மிகவும் பிரபல்யமான உளவியல் நிபுணரான மேறிசீ வெய்லான்ற் என்ற பெண்மணியிடமிருந்தே வந்திருக்கிறது.

மணவாழ்வில் விசுவாசமின்மையின் விளைவுகள் பற்றி வெய்லான்ற 'Men, Love, Fidelity' என்று நூலொன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார். பிரான்ஸில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் அந்த நூலில் இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாக 'த ரெலிகிராவ்' பத்திரிகை இவ்வாறும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கும் ஆண்கள் தங்களது சொந்தக் குடும்ப வாழ்க்கையை மேம்படுத்துவதில் உண்மையில் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதே தனது உறுதியான அபிப்பிராயம் என்று வெய்லான்ற் குறிப்பிட்டிருக்கிறார். இவர் பெண்களின் குணவியல்புகள் தொடர்பான விவகாரங்களிலேயே மிகவும் தேர்ச்சிபெற்ற உளவியல் நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு பெண்களுடன் ஆணொருவர் பாலியல் தொடர்பு வைத்திருக்கிறாரென்றால் தனது மனைவியை அவர் நேசிக்கவில்லை என்ற முடிவுக்கு ஒருபோதுமே வந்துவிடக்கூடாது. மூச்சு வாங்குவதற்கு ஒரு இடைவெளி தேவைப்படுவதுபோல மணவாழ்விற்குப் புறம்பான பாலியல் தொடர்பிலும் நாட்டம் பிறக்கிறது. அத்தகைய ஆண்களில் அதிகப் பெரும்பாலானவர்கள் வாய்ப்புக் கிடைத்தால் கூட இரண்டாவது பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் ஏகபத்தினி விரதனாகவே இருப்பார்கள்.




தம்பதியருக்கு இடையே ஏற்படக்கூடிய விசுவாச உடன்பாடு என்பது இயற்கையானதல்ல. கலாசாரப் பின்னணியைக் கொண்டது என்பதையும் தனது மனைவியைத் தொடர்ந்து நேசிக்கின்ற ஆண்களைப் பொறுத்தவரை இன்னொரு பெண்ணுடனான பாலியல் தொடர்புக்கு உடலியல்பு கடந்த செயற்பாடும் காரணம் என்பதையும் பெண்கள் ஏற்றுக்கொள்ளும் போது உண்மையில் அவர்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுபவர்களாக மாறுவார்கள் என்று வெய்லான்ற் தெரிவித்திருக்கிறார்.

விசுவாசம் (Fidelity) என்பது காதலின் வரைவிலக்கண அறுதிச்சான்று அல்ல. சிறுவர் பராயத்தில் இருந்தபோது வீட்டில் அடிக்கடி தந்தையரை காணாமல் இருந்த ஆண்கள் 'தந்தை' என்ற அந்தஸ்தைப் பற்றி முற்றிலும் கருத்தியல் ரீதியான சிந்தனையையே கொண்டிருப்பார்கள். தந்தையரின் செயற்பாடுகள் குறித்தும் நடைமுறைச் சாத்தியமான எண்ணம் அவர்களிடம் வளர்ந்திருக்க வாய்ப்பில்லை. இத்தகையவர்கள் நெகிழ்வுத் தன்மையை வெளிக்காட்டுவது மிகவும் குறைவாக இருக்கும். அத்துடன், ஒரு ஆணின் கடமை எது என்பது தொடர்பிலும் கருத்தியல் தோற்றப்பாட்டையே இவர்கள் கொண்டிருப்பார்கள் என்றும் மேற்படி உளவியல் நிபுணர் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக் கொடையாளிகளின் தியாகத்தில் தான் டெங்கு நோயாளிகளின் ஜீவன்




டெங்கு நோயைப் பற்றி யாவரும் அறிந்து இருப்பினும் டெங்கு நோயின் வருமுன் காப்பது பற்றியே எல்லோரும் கூறிவரினும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சிகிச்சை பலனளிக்காது போவதற்கான காரணங்களும் அவற்றை எதிர்கொள்வது பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகவே உள்ளது.

இது ஒரு வைரஸ் நோய் என்பதனால் இதற்கெதிரான மருந்துகள் இல்லை. எனினும் இதனால் ஏற்படும் பாதிப்புக்களை ஈடுசெய்வதே முறியடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கையாகும்.

அதாவது டெங்கு நோயின் போது குருதிக் குழாய்களின் ஊடு புகவிடும் தன்மை அதிகரிப்பதும் குருதிக் கசிவும் நுண் குருதிக்கலன் தரவில் அடைப்பு ஏற்படும் குருதிக் கலன்களின் ஊடு புகவிடும் தன்மை அதிகரிப்பதால் நுரையீரல் மற்றும் வயிற்றுப்பகுதியில் திரவத் தேக்கம் காணப்படும். இவற்றினால் குருதியின் அளவு குறைவுறும். இதனால் தாழ் குருதியமுக்கம் இவற்றைவிட வாந்தி, காய்ச்சல் என்பனவற்றினாலும் உள்ளெடுக்கப்படும் நீரின் அளவு குறைவது மேலும் வலுவூட்டப்படுகின்றது.

இவ்வாறு குருதிக்கலன்களின் ஊடு புகவிடும் தன்மை அதிகரிப்பு மற்றும் காய்ச்சல் இவற்றுடன் குருதிச் சிறுதட்டுகளின் எண்ணிக்கையும் குறையும். குருதிச் சிறுதட்டுக்கள் உடலில் இருந்து குருதி இழப்பு ஏற்படும் போது குருதி உறைதலை மேற்கொண்டு குருதி வெளியேறும் பகுதியை அடைப்பதால் குருதிப்பெருக்கு தடைப்படுகின்றது. எனினும் இந்டெங்கு நோயாளிகளில் அவ்வாறு மேற்கொள்வதற்கு போதியளவு குருதிச் சிறுதட்டுக்கள் இன்மையால் குருதிக்கசிவுகள், முரசு போன்ற பகுதியூடாகவும் குடலிலும் மாதவிடயினூடும் நிகழலாம். இங்கு குடலில் ஏற்படும் குருதிக் கசிவுகளினால் கறுப்பு நிறமான மலம் வெளியேற்றப்படும்.




குருதியின் திரவ இழைய இழப்பையும் குருதி உறைதற் பொறிமுறையையும் வலுவாக பாதிப்பதனால் குருதி இழப்பினை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்படும்.

எனினும் நவீன விஞ்ஞான வசதிகளினால் குருதி மாற்றீடு செய்யப்படுவது போன்றே குருதிச் சிறுதட்டுக்களின் பிரித்தெடுப்பு மற்றும் குருதித் திரவ இழைய பிரித்தெடுப்பு போன்றவையும் காணப்படுகின்றன. இவற்றையும் குருதிக் கொடையாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் மாற்றீடு செய்ய முடியும்.

குருதிக் கொடையாளிகளின் சேவை இங்கு தேவையாகவே காணப்படுகிறது. இதுவே இப்போதுள்ள டெங்கு நோயாளிகளிற்கான உடனடி நிவாரணம் இருப்பினும் திறன் குறைந்து போய்விட்ட சுகாதார முறைகள் தான் இதன் தோற்றவாய் என்பதால் மேலும் சுகாதார, சமுதாய ஆர்வலர்கள், குருதித்தேவையை ஒரு புறம் மக்களிடையே தெளிவுபடுத்த வேண்டும். மறுபுறம் நுளம்பு அழிப்பு மற்றும் நகர் சுகாதாரத்தை உயிர் பெறச் செய்ய வேண்டும்.

**டாக்டர் வெ.நாகநாதன்**

# சொர்க்க வாசற் கேள்வி



கார் விபத்தொன்றில் பலியான மூன்று நண்பர்கள் நேரே சொர்க்கத்தின் வாசலுக்குப் போனார்கள்.

சொர்க்கத்திற்குள் அவர்களை அனுமதிப்பதற்கு முன்னதாக வாயிற் காவலர் மூவரிடமும் ஒரே கேள்வியைக் கேட்டார்.

'நீங்கள் பிரேதப் பெட்டிகளுக்குள் கிடந்த போது உங்கள் உறவினர்களும் நண்பர்களும் அழுது புலம்பி இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். உங்களைப் பற்றி அவர்கள் என்ன சொல்வதை விரும்புவீர்கள்?' - இதுவே கேள்வி.

முதலாவது ஆள் சொன்னார் எனது காலத்தில் வாழ்ந்த டாக்டர்களில் சிறந்தவன் நானே என்றும் ஒரு சிறந்த குடும்பஸ்தனாக விளங்கினேன் என்றும் அவர்கள் கூறுவதை கேட்கவே விரும்புவேன்.

இரண்டாவது ஆள்-நான் ஒரு சிறந்த கணவர் என்றும் சிறுவர்களுக்கு நல்ல போதனைகளைச் செய்த பாடசாலை ஆசிரியர் என்றும் அவர்கள் என்னைப் பற்றிக் கூறுவதையே கேட்கவிரும்புவேன்.

மூன்றாவது ஆளிடமிருந்து வந்த பதில்- 'பாருங்கள் அவரின் உடல் அசைகிறது' என்று அவர்கள் கூறுவதைக் கேட்கவே விரும்புவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புக்கு எதிரான போராட்டம்!






அண்மைய நாட்களில் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய வட பகுதி மக்களை பெரும் பயப் பீதியில் உறைய வைத்துள்ள பிரச்சினையாக டெங்கு விளங்குகின்றது. இதுவரை காலமும் தென்பகுதியையே பெரிதும் உலுக்கி வந்த இந்நோய் தற்போது வடபகுதியிலும் உயிர்களைக் காவு கொள்ளத் தொடங்கிவிட்டது. வவுனியாவில் 20 பேரும் யாழ்ப்பாணத்தில் 5 பேரும் கடந்த வாரம் வரை இதற்கு பலியானதோடு பல நூற்றுக்கணக்கானோர் இதன் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர். ஏற்கனவே இந்நோய் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டிருப்பதால் இப்போது இந்நோயின் பிரதான தடுப்பு முறையான நுளம்புப் ஒழிப்பு பற்றி சிந்தித்தல் சாலப்பொருத்தமானதாகும்.

பருவ மழையுடன் நுளம்பின் பெருக்கம் தவிர்க்க முடியாத வகையில் அதிகரிக்கின்ற போதிலும் அது பாரிய பிரச்சினையாக உருவெடுப்பதற்கு மனிதர்களுடைய பொறுப்பற்ற செயற்பாடுகளும் சூழல் பற்றிய விழிப்புணர்வு இன்மையும் பெரும் பங்கை வகிக்கின்றது. டெங்கு நோயைப் பரப்பும் ஏடிஸ் *(Aedes)* நுளம்பினை எடுத்துக்கொண்டால் கழிவுநீர் தேங்கும் இடங்களிலிருந்தே இனம் பெருகுகின்றது.

நுளம்பு, பெருக்கம் கட்டுப்படுத்தலில் தனிநபர் தொடக்கம் சமுதாயத்தின் பல்துறைசார் அமைப்புகள் வரையில் சூழல் பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகின்றது. இன்றைய நாட்களில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை மிகவும் அதிகரித்துவிட்டது. இவைகள் உக்காமல் சூழலில் தேக்கம் அடைந்து காணப்படுகின்றது. இவை நுளம்புகள் பெருகுவதற்கான ஏதனங்களாக மழைக் காலங்களில் விளங்குகின்றன.

கழிவுப் பொருட்களைத் திட்டமிட்ட முறையில் அகற்றாமல் வீடுகளிலும் பொது இடங்களிலும் தேக்கம் அடையச் செய்வதில் மக்களும் ஊழியர்களும் நுளம்புகளின் நண்பர்கள் ஆகிவிட்டனர். விளைவுகளை



## எதிர்நோக்கும் சவால்களும் வெற்றிக்கான படிநிலைகளும்

அவர்களே இன்று அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். இவ்வாறாக சவாலாக உருவெடுத்திருக்கும் நுளம்புப் பெருக்கத்தையும் அதன் தாக்கமான உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றமையையும் எவ்வாறு வெற்றிகொள்ளப் போகின்றோம் என்பதே இன்றைய கேள்வியாகும்

**டெங்கு ஒழிப்பு செயலணி**

முதலில் பரந்துபட்ட ஒரு பொறிமுறையை உருவாக்கி நடவடிக்கைகளை பல்வேறு கோணங்களிலும் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். தற்போது அத்தகையதொரு பொறிமுறை டெங்கு ஒழிப்பு செயலணி என்ற வடிவில் வவுனியாவில் இவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு நடவடிக்கையின் வாயிலாக சுகாதாரத்துறையினர், பொது நிர்வாகத்துறையினர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுதேச சமூக அமைப்புக்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என சகல தரப்பினரும் ஒழுங்கிணைந்த ரீதியில் நுளம்புக்கெதிரான போரில் பங்கெடுக்க முடியும்.

**டெங்கு கூம்பி *(COMBI)* செயல்திட்டம்**

ஒழுங்கிணைந்த ரீதியில் உலக சுகாதார நிறுவனத்தின் பிராந்திய நிறுவனமாக முழு அமெரிக்காவிற்குமான சுகாதார தாபனம் (Pan American Health Organization) மத்திய அமெரிக்காவின் விலிஸ் (Belize)நாட்டில் 2004 ஆம் ஆண்டில் மேற்கொண்ட செயல் திட்டத்தை ஒத்த ஒரு செயல்திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவை கருதிய காத்திரமான ஒரு நடவடிக்கையாக அமைய முடியும்.

இச் செயல்திட்டம் பிரதானமாக ஏடிஸ் நுளம்புகள் பெருகும் கழிவு நீர் முகாமைத்துவத்தில் பெரிதும் கவனம் எடுக்கின்றது. குப்பை கூளங்களையும் கழிவு நீர் தேங்கும் ஏதுநிலைகளை இல்லாமல் செய்வதிலும் முடியாமல் போகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றில் நுளம்புக் குடம்பிகள் பெருகாமல் செய்வதில் கையாளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இத்திட்டம் விபரிக்கின்றது.

நகர்ப்புறங்களிலேயே கழிவு நீர் தேங்குதல் பாரிய பிரச்சினையாக ஒப்பீட்டளவில் விளங்குகின்றது. எனவே முதலில் மாநகர ஊழியர்களும் மக்களும் இது தொடர்பாக அறிவூட்டப்பட வேண்டும் என்றும் வாராந்த ரீதியிலும் மாதாந்த ரீதியிலும் கலந்துரையாடல்களும் மாநாடுகளும் நடத்தப்பட்டு முன்னேற்றங்கள் சவால்கள் ஆராயப்பட வேண்டும் எனவும் இத்திட்டம் தெரிவிக்கின்றது.

மேலும் கழிவு நீர் தேங்கும் இடங்களில் நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்கு சுண்ணாம்பு நீரை 0.6-13 % செறிவில் பயன்படுத்த முடியும் என இத்திட்டம் சிபாரிசு செய்கின்றது.

உயிரியல் முறைக் கட்டுப்பாடு

நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன் இனங்களை நீர் நிலைகளில் அறிமுகம் செய்வதன் ஊடாகவும் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். இம்முறையின் கீழ் கடந்த காலங்களில் திலாப்பியா, கப்பீஸ், கட்டில்பச்சான் ஆகிய மீன் இனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றினை தற்போதும் பெருமளவில் புதிய நீர் நிலைகளிலும் அறிமுகம் செய்யலாம். மேலும் அண்மைய நாட்களில் புதிய பற்றீரியா இனங்களை அறிமுகம் செய்து நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு ஆலோசித்து வருகின்றது. இதற்கு கியூபா நாட்டிலிருந்து உதவியும் பெறப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இதை நடைமுறைப்படுத்துவதில் வாதப் பிரதி வாதங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

ஒருங்கிணைந்த முகாமைத்துவம்

உயிரியல், இரசாயன முறைகளைத் தகுந்த சூழலுக்கு ஏற்ற முறையில் உபயோகித்து நுளம்புக் குடம்பிகளை அழிப்பதோடு சிறிய கழிவு அகற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுப்பதன் வாயிலாக நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற பாரிய செயற்றிட்டங்களை சமூகத்தின் சகல மட்டங்களிலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இவற்றிற்கு பல்கலைக் கழகங்களின் சமுதாய மருத்துவத்துறையினரின் நிபுணத்துவ ஆலோசனை, வழிகாட்டுதல்கள், பங்களிப்புகள் என்பவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகைய ஒன்றுபட்ட ஒரு பாரிய செயல்திட்டத்தை முன்னெடுப்பதன் வாயிலாக சூழலை சுத்தமாக பேணுவதனூடாக நுளம்பினால் பரப்பப்படும் நோய்களை கட்டுக்குள் கொண்டு வர முடியும். நாளையும் நலமுடன் நாம் வாழ வேண்டுமெனில் இன்று எமது பங்கை சரிவர செய்யவேண்டுமல்லவா? செய்வோமா!

டாக்டர்
ப.நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 வருடங்கள் கடந்தும் ரூஸ்வெல்டின் மரணத்துக்கான காரணம் குறித்து சர்ச்சை



அமெரிக்காவின் போர்க்கால ஜனாதிபதி பிராங்ளின் டி ரூஸ்வெல்டின் மரணத்துக்கான காரணம் நீண்டகாலமாக வாதப்பிரதிவாதங்களுக்குரிய விவகாரமாகவே இருந்துவந்திருக்கிறது.

போலியோ நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் 1945 ஆம் ஆண்டில் இருதய நோயின் காரணமாகவே இறந்தார் என்று பரவலாக நம்பப்பட்டது.

65 வருடங்கள் கழித்து தற்போது வெளியாகியிருக்கும் நூலொன்று ரூஸ்வெல்ட் புற்றுநோயின் காரணமாகவே இறந்தார் என்று கூறுகிறது.

*"FDR Deadly Secret'* என்ற இந்த நூலை ஸ்ரீபன் லோ மாசோவ், எறிக்ஃபெற்மான் என்ற இரு அமெரிக்கர்கள் எழுதியிருக்கிறார்கள்.

*Melanoma* என்ற அழைக்கப்படுகின்ற தோல்புற்று நோயினால் தான் ரூஸ்வெல்ட் மரணமடைந்தார். இத்தோல் புற்றுநோய் அவரது மூளைக்கும் அடிவயிற்றுப்பகுதிக்கும் பரவியிருந்தது. மூளையில் ஏற்பட்ட ஒரு கட்டியே இறுதியில் ஜனாதிபதியின் உயிரைப் பறித்தது என்று நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதாக 'நியூயோர்க் போஸ்ற்' பத்திரிகை இவ்வாரம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அவதானிப்பின் மூலமாகவே தாங்கள் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் பௌதீகச் சான்று எதுவுமே தங்களிடம் கிடையாது ஏனென்றால் ரூஸ்வெல்டின் மருத்துவப் பதிவு ஆவணங்கள் அவரது மரணத்தையடுத்து காணாமல் போய்விட்டன. பிரேதப்பரிசோதனையும் ஒருபோதுமே நடத்தப்படவில்லை என்று ஃ பெற்மான் கூறுகிறார்.

'மரணமடைவதற்கு சிலவாரங்கள் முன்னதாக சோவியத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் சேர்வின்ஸ்ரன் சேர்ச்சிலுடன் நடத்திய யால்ரா மகாநாடு தொடர்பாக அமெரிக்க காங்கிரஸில் ரூஸ்வெல்ட் உரையொன்றையாற்றினார். விடயத்துக்கு பொருத்தமில்லாதவகையில் அந்த உரையின் போது ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களில் பேசினார். தயாரிக்கப்பட்ட அந்த உரையில் இருந்து அவர் வாசித்தவற்றை புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கவில்லையாம். அவர் களைத்துப் போய் விட்டதாக எல்லோரும் நினைத்துக் கொண்டனர் என்றும் ஃபெற்மான் கூறினார்.

ஜனாதிபத் ரூஸ்வெல்டின் சொந்த இடமான ஹைறட்பார்க்கிற்கு பல தடவைகள் விஜயம் மேற்கொண்ட லொமாசோவும் ஃபெற்மானும் அவரின் காங்கிரஸ் உரையின் மூலப்பிரதியைப் பார்வையிட்டனர். அந்தப் பிரதியில் எவ்வாறு சொற்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் ஆராய்ந்தார்கள்.

ரூஸ்வெல்ட் மூலப்பிரதியை வாசிக்கும் போது அதன் இடதுபக்கத்தில் இருந்த சொற்களின் இடதுபுறத்தில் இருந்த எழுத்துக்களையே பிழையாக உச்சரித்தார். இந்தக் குறைபாட்டை ஆங்கிலத்தில் ஏனுட்டிச்ணிணீண்டிச் என்று சொல்வார்கள். மூளையின் இடது பக்கத்தில் கட்டி இருந்தால் வலதுபக்கப்பார்வையே இல்லாமல் போகும்.

1940 ஆம் ஆண்டளவில் (அப்போது ரூஸ்வேல்ட் தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இருந்தார்) தோல் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் காலத்திலும் சரி தற்போதும் சரி புற்றுநோய்வகைகளில் மெலனோமா என்பது படுமோசமானதாகவே காணப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டே நாம் மெலனோமாவின் விளைவாக மூளையில் தோன்றிய கட்டியே ஜனாதிபதியின் உயிரைப் பறித்தது என்ற முடிவுக்கு நாம் வந்தோம் என்று நூலாசிரியர்கள் இருவரும் விளக்கமளித்ததாக நியூயோர்க் போஸ்ட் கூறியிருக்கிறது.

## இரண்டாவது அபிப்பிராயம்



கணவர் டாக்டர். மனைவி ஆசிரியர். இருவருக்கும் இடையே காலைச் சாப்பாட்டு வேளையில் கடும் வாக்குவாதம் மூண்டுவிட்டது.

ஆத்திரமிகுதியில் கணவர் மனைவியைப் பார்த்து 'சாப்பாட்டு வேளையில் மாத்திரமல்ல, படுக்கையிலும் கூட என்னுடன் நன்றாக நீர் நடந்துகொள்வதில்லை' என்று கடிந்து விட்டு வீட்டிலிருந்து வெளியே சென்று விட்டார்.

சில நிமிடங்கள் கழித்து மனைவியை கேவலமாக ஏசியதை உணர்ந்து கொண்ட கணவர் இவரைச் சமாதானப்படுத்துவதற்காக ஆஸ்பத்திரியில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தார்.

பல தடவைகள் தொலைபேசி மணி அடித்தபின்னரே மனைவி அதை எடுத்து பதிலளித்தார்.

அதனால் எரிச்சலடைந்த கணவர் 'தொலைபேசியை எடுப்பதற்கு ஏன் இவ்வளவு நேரம் எடுத்தது' என்று கேட்டார்.

'மனைவி சொன்னார் நான் படுக்கையில் இருந்தேன்.

கணவர்- இந்த காலை நேரத்தில் படுக்கையில் என்னசெய்கிறீர்.

மனைவி - இரண்டாவது அபிப்பிராயமொன்றைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாசார, பண்பாட்டு சீரழிவுகளால் சிதைவடைந்துவரும் குடாநாடு

யாழ்.குடாநாட்டுக்கான ஏ-9 வீதி திறக்கப்பட்டுவிட்டது. பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டுவிட்டனவென தமிழ் மக்கள் ஓரளவுக்கு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற அதேவேளை, சமூக சீர்கேட்டுக்குரிய விடயங்களும் இப்பாதையூடாகவும் பொருளாதாரத்தடை நீக்கமூடாகவும் எந்தவித தங்குதடையுமின்றி குடாநாட்டை சென்றடைவதால் அங்கு பெரும் கலாசார சீர்கேடுகள் ஏற்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் அபாயமணி அடிக்கின்றனர்.

குறிப்பாக குடாநாட்டு இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்தே கலாசார சீர்கேட்டுக்குரிய விடயங்கள் நகர்த்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் இவர்கள் குடாநாட்டுக்கு ஏ-9 வீதியூடாக கொண்டுவரப்படும் அத்தியாவசியப் பொருட்களிலும் விட மதுபான வகைகளே அதிகமுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

யுத்தம் முடிவடைந்துள்ள இன்றைய நிலையில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறுதான் வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் இயல்பு நிலைக்காகவும் கடந்த வருட இறுதியில் ஏ-9 வீதியூடாக மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டதனால் குடாநாட்டு மக்களின் இயல்பு நிலை ஓரளவு சீரடைந்துள்ள அதேவேளை இப்பாதையூடாக கலாசார சீர்கேட்டுக்குரிய விடயங்கள் குடாநாட்டை மிக வேகமாகச் சென்றடைந்துள்ளன.

இதனால் தற்போது யாழ். குடாநாடு புதியதொரு மேற்கத்தேய சூழலினுள் பிரவேசித்துள்ளது. வடக்கில் பல தசாப்த காலமாக நிலவிய யுத்தம் முடிவடைந்து சுமுக நிலை ஏற்பட்ட பின்பே ஏ-9 வீதி திறக்கப்பட்டுள்ளதுடன் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டமும் நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.மக்களின் நலன்கருதி அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திகளால் அவர்களுக்கு நன்மை பயக்குகின்ற அதேநேரம் யாழ்ப்பாண மக்களுக்கென இருந்துவந்த தனித்துவமான கலாசாரமும் சீரழிந்து வருகின்றது.

மேற்கத்தேய கலாசாரம் வடக்கில் ஊடுருவியுள்ளதால் வெளிநாட்டுப் பொருட்களின் பாவனையும் போதைப்பொருட்கள், மதுபான வகைகளின் பாவனையும் இங்கு அதிகரித்துள்ளன.

அத்தோடு முன்பைவிட தொழில்நுட்பம், தொடர்பாடல் வசதிகளும் இங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரு பள்ளி மாணவன் நெற்கபேக்களுக்குச் சென்று ஆபாச இணையத்தளங்களையும் ஆபாச சிடிக்களையும் பார்த்து பொழுதுபோக்கும் நிகழ்வுகள் அதிக்மாகக் காணப்படுகின்றன.

பாடசாலை செயற்பாடுகளுக்கென பெற்றோருடன் சண்டைபிடித்து பணத்தைப் பெற்று நெற்கபேக்களில் தமது எதிர்காலத்தை தொலைப்போரின் தொகை இன்று அதிகரித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற கடந்த காலங்களில் யாழ்.மக்களுக்கென தனியான ஒரு இலக்கு இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் அங்குள்ள இளைஞர், யுவதிகள் எவ்வித இலக்குமின்றி கட்டாக்காலிகளாகவும் காவாலிகளாகவும் மாறிவருகின்றனர்.

குடாநாட்டு இளைஞர், யுவதிகள் தற்போது நாகரீக மோகத்தில் அதிக ஈடுபாடு காட்டியதால் சமூக மாற்றம் ஏற்படுகிறது. தமக்கென இருந்த கலாசார விழுமியங்கள் மாற்றமடைவதுடன் பாரம்பரிய முறையினை மறந்து மேற்கத்தேய முறைக்கு ஊடுருவுகின்றனர்.

வீதிகள் திறக்கப்பட்டு போக்குவரத்துகள் இலகுவாக்கப்பட்டதன் பின் இவ்வீதிகளினூடாகவே மனித நாகரீக மாற்றம், சுய நடத்தை வேறுபாடுகள், சமூகச் சீரழிவுக்கான அனைத்து வழிவகைகளும் கொண்டுசெல்லப்படுகின்றது. நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஆபாச கலாசார சீர்கேடான நடை, உடை, பாவனை மாற்றங்கள் அப்பகுதி இளைஞர், யுவதிகளை கவர்ந்து இவர்கள் மீது ஈர்ப்பு விசை ஏற்பட்டு இவ்வாறான நிலைக்கு மாறுகின்றனர். இதனால் வீண் செலவுகளும் அதிகரிக்கப்படுகின்றது எனக் கூறமுடியும்.

மேலும் இப்பகுதியில் தென்மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களிலிருந்து வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை முன்னரைவிட அதிகரித்துள்ளதால் இங்கு காணப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை தற்போது குறைவடைந்துள்ளபோதும் சில வியாபாரிகள் போதைப் பொருட்களையும் குடாநாட்டில் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும் ஏ-9 வீதி திறக்கப்பட்டு வடக்கில் அபிவிருத்திப் பணிகளால் நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றது. காலங்காலமாக கட்டிக்காக்கப்பட்ட தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை மேற்கத்தேய கலாசார முறைகள் தகர்க்கின்ற நிலை தோன்றியுள்ளது. இந்நிலையால் நல்லதை தேர்ந்தெடுத்து தீயதை ஓரம் கட்டவேண்டிய நிலை யாழ்.குடாநாட்டு மக்களின் கைகளிலேயே காணப்படுகிறது.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை பற்றிய தகவல்கள்

ஆமை ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்காகும். இவை நீரிலும் நிலத்திலும் வாழவல்ல இரு வாழ்விகள் ஆகும்.

நிலத்தில் வாழும் ஆமைக்குக் கால்களில் நகங்கள் அமைந்திருக்கின்றன. ஆமை தரையில் நடக்கும் வேகம் மணிக்கு 70 மீற்றர். கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்பு போன்று அமைந்திருக்கும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும்.

இதன் உடல் ஓட்டினால் மூடப்பட்டதாக இருக்கும். உலகில் ஏறத்தாழ 300 வகையான ஆமையினங்கள் உள்ளன. இவற்றில் சில இனங்கள் அழிவாபத்தை எதிர்கொள்கின்றன.



கடலாமைகள் ஒப்பீட்டளவில் பெரியவை. தோல் முதுகுக் கடலாமை என்ற ஆமையினம் 900 கிலோகிராம் நிறை வரை வளர்கிறது.

பொதுவாக உயிரினங்களில் ஆமைகளுக்கு நீண்ட ஆயுள் உள்ளது. அதன் இதயம் மிகவும் நிதானமாகத் துடிப்பதே அதன் நீண்ட ஆயுளுக்குக் காரணமாக அமைகிறது.

ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சேர்ந்தது. கடலில் வாழும் பெண் ஆமைகள், கருத்தரித்ததும் கடற்கரையை நோக்கி கூட்டமாக பயணிக்கத் துவங்கும். கரையை அடைந்ததும் மண்ணில் குழி தோண்டி முட்டைகளை இட்டுவிட்டு சென்றுவிடுகின்றன. ஒவ்வொரு கடல் ஆமையும் 200 முட்டைகளை ஒரே சமயத்தில் கூட இட்டுவிடும்.

கடல் ஆமைகளில் ஆறு வகை மிகவும் பிரசித்தி பெற்றவை.




## நோபல் பரிசு

★ நோபல் பரிசு அல்பிரெட் நோபல் என்பவரின் நினைவாக 1901 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

★ பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு 1969 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது.

★ ஸ்வீடன் மத்திய வங்கிதான் பொருளாதார நோபல் பரிசை வழங்குகிறது.

★ ஆண்டுதோறும் டிசம்பர் 10 ஆம் திகதியன்று நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

★ நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மற்றும் இருமுறை நோபல் பரிசு பெற்றவர் மேரி கியூரி.

★ இலக்கியத்திற்கான நோபல் பரிசு வென்ற முதல் நபர் சுல்லி புருடோம்மே.

# குறுக்கெழுத்துப்போட்டி - 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ★ | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | ★ |
| ★ | ★ | 11 | 12 | 13 | ★ |
| 14 | 15 | ★ | 16 | 17 | 18 |
| 19 | 20 | ★ | ★ | ★ | 21 |
| 22 | 23 | 24 | ★ | 25 | 26 |

**இடமிருந்து வலம்**

*1.* யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல ஆலயம்
5. புஷ்பம்
6. சூரியன் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
*11.* இது பத்தும் செய்யும் என்பர் (குழம்பியுள்ளது)
*14.* சிநேகிதி (குழம்பியுள்ளது)
*16.* இச்சை என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
*19.* ஐரோப்பிய நாணயம்
22. இது என்றால் படையும் நடுங்கும்
25. செல்போனுக்கு போடுவது

**மேலிருந்து கீழ்**

*1.* ஆறு
2. சிலை வடிக்க பயன்படுவது (தலைகீழ்)
3. ஊத ஊதப் பெருக்கும் (குழம்பியுள்ளது)
4. இது ஒரு கலை
*10.* காயம்
*14.* பிடல் காஸ்ரோவின் நாடு
*15.* உணர்ச்சி அல்லது தன்மானம் என்றும் சொல்வர் (குழம்பியுள்ளது)
*18.* இது கரையும்

## குறுக்கெழுத்துப்போட்டி - 13 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| *1.* சீனா | *1.* சீப்பு |
| *3.* கலி | *2.* பனாமா |
| *5.* இறுமாப்பு | *3.* கறுப்பு |
| *10.* பரப்பு | *4.* புலி |
| *15.* புண் | *7.* இரண்டு |
| *18.* நண்டு | *14.* தாயகம் |
| *21.* தாதா | *18.* நரி |
| *23.* கரி | *19.* கண் |
| *25.* நேசம் | *21.* சதா |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**தி.வருணியா**
மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

## பாராட்டுப்பெறுவோர்

*01.* வே.குமாரசுவாமி, அத்துளு அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

*02.* இ.கிருஷ்ணப்பிரியா, நாவல் தோட்டம், புற்றளை வீதி, புலோலி தெற்கு, புலோலி.

*03.* க.ஞானமுத்து, கைதடி மேற்கு, கைதடி.

*04.* நா. சுந்தரலிங்கம், தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

*05.* செ.ரவிசாந்த், விரமனை, குப்பிளான்.

உங்கள் விடைகளை
**'Saturday மெயில்'**
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

## நாய்களுக்கு உணவு விடுதி

* நாய்களுக்கு உணவு விடுதி உள்ள இரு நகரங்கள் டோக்கியோ, நியூயோர்க்.

* டிஜிட்டல் கல்குலேட்டரைக் கண்டுபிடித்தவர் பிளெய்ஸ் பாஸ்கல்.

* புனைபெயர் சூட்டும் பழக்கம் தோன்றிய முதல் நாடு சீனா.

* காற்றிலுள்ள தூசி பற்றி ஆய்வுப் படிப்புக்கு 'கோனியாலஜி' என்று பெயர்.

## விடுகதை

1. விண்ணை சிரிக்கச் செய்யும்; கண்ணைப் பறிக்கச் செய்யும். அது என்ன?

2. தலைக்கு மட்டுமல்ல உயிருக்கும் கவசம். அது என்ன?

3. ஒற்றைக் காலில் ஆடுவான்; ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார்?

4. மரம் உண்டு அடுப்பெரிக்க உதவாது; சீப்புண்டு தலைவார முடியாது; பூவுண்டு கொண்டையிலே முடிக்க முடியாது. அது என்ன?

5. படபடவென்று பொரிவான்; பண்டிகை நேரம் எரிவான்; அவன் யார்?

6. கிட்ட இருக்கும் பட்டணத்தை எட்டிப் பார்க்க முடியவில்லை. அது என்ன?

7. தண்ணீரில் தள்ளாடினாலும் பத்திரமாக கரை சேருவான். அவன் யார்?

8. உழைக்க உழைக்க உடம்பெல்லாம் தோன்றும். அது என்ன?

1. மின்னல்
2. தலைக்கவசம்
3. பம்பரம்
4. வாழைமரம்
5. பட்டாசு
6. முதுகு
7. படகு
8. வியர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோசலை மாண்பு

முனைவர் தெ.ஞானசுந்தரம்

## இலக்கிய சுவை...

அயோத்தி மக்கள் ராமனுக்கு முடிசூட்டு விழா என்று வள்ளுவன் பறையறைந்தது கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார்கள். முதிய பெண்மணிகள் கோசலையைப் போலவும் வேதம் வல்ல அந்தணர்கள் வசிட்டனைப் போலவும் மணமான இளம் பெண்கள் சீதையைப் போலவும் சீதை திருமகளைப் போலவும் அவ்வூரில் வாழ்ந்த ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்கள் தசரதனைப் போலவும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார்கள். இதனை,

**மாதர் கற்பின் மிக்கார்**
**கோசலை மனத்தை ஒத்தார்;**
**வேதியர் வசிட்டன் ஒத்தார்;**
**வேறுள மகளிர் எல்லாம்**
**சீதையை ஒத்தார்; அன்னாள்**
**திருவினை ஒத்தாள்; அவ்வூர்ச்**
**சாதுகை மாந்தர் எல்லாம்**
**தயரதன் தன்னை ஒத்தார்**

என்று அழகாக விளக்கியுள்ளார் கம்பர்.

ஒவ்வொரு கம்பர் பாட்டையும் சுண்டிப் பார்த்து 'இது கம்பன் பாட்டு' 'இது கம்பன் பாட்டு அன்று' என்று விளக்கியவர் ரசிகமணி டி.கே.சி. அவர் சொல்லும் திருத்தங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள இயலாது என்பது அறிஞர் உலகம் அறிந்த உண்மை. ஆயினும் சில பாடல்களுக்கு அவர் செய்துள்ள திருத்தங்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. இப் பாட்டில் இரு திருத்தங்களை ரசிகமணி டி.கே.சி.செய்து, தமது 'கம்பர் தரும் இராமாயணம்' முதற்பாகத்தில் வெளியிட்டுள்ளார். 'மாதர்கள் கற்பின் மிக்கார்' என்பதற்கு மாறாக, 'மாதர்கள் ஆண்டின் மிக்கார்' என்பது முதல் திருத்தம். 'சாதுகை மாந்தர் எல்லாம்' என்பதற்கு மாறாக 'சாதன மாந்தர் எல்லாம்' என்பது இரண்டாவது திருத்தம். இவற்றில் இரண்டாவது திருத்தம் அவ்வளவு பொருத்தமாக அமையவில்லை. மகாவித்துவான் மே.வீ.வேணுகோபாலபிள்ளை, 'திருமழிசைப்பிரானின் நான்முகம் திருவந்தாதியில் உள்ள,

'சாதுவராய்ப் போதுமின்கள்' என்றான் நமனும்தன் தூதுவரைக் கூடிச் செவிக்கு' 68)

என்னும் வெண்பாவைக் காட்டி, 'சாதுகை மாந்தர்' என்பது 'சாதுவ மாந்தர்' என்று இருத்தல் வேண்டும் என்று குறித்துள்ளார். இது நல்ல பாடமாகத் தோன்றுகிறது.

முதல் திருத்தம் ரசிகமணியின் அறிவு நுட்பத்தைக் காட்டுகிறது. கோசலை கற்பில் சிறந்தவள் என்பது உண்மையே. ராமன் அவ்வன்னையை, 'அருங்கற்பினோய்' (1619) என்று விளித்துப் பேசுகிறான். கம்பர் அவளைக் 'கற்புறுத்திய கற்புடையாள்' (1620) என்று குறிக்கிறார். ஆனால், ராமனுக்கு முடிசூட்டு விழா என்பதைக் கேட்டுக் கோசலையைப் போல மகிழ்வதற்கும் கற்பொழுக்கத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

இங்கு மாதர்கள் கற்பைப் பற்றிய பேச்சு வேண்டாததாக அமைகிறது. அதனால் அவர் 'ஆண்டின் மிக்கார்' என்று திருத்தம் செய்தார். நீதிபதி மகராஜன், தென் மாவட்டத்தில் கிடைத்த ஓர் ஏட்டுச் சுவடியில் 'ஆண்டின்' என்பதற்கு மாறாக 'வயதின்' என்னும் பாடம் காணப்பட்டதாகத் தம் கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார். இத் திருத்தங்களின் பொருத்தத்தை அறிதியிடக் கோசலையின் பண்புநலனைப் பற்றிய தெளிவு துணைபுரியும். கோசலை மற்ற பட்டத்தரசிகளைப் போல அரச குடும்பத்தில் பிறந்தவள். கோசல மன்னனின் மகள் கோசலை என்றும் மகத நாட்டரசன் மகள் சுமித்திரை என்றும் கேகய நாட்டு மன்னனின் மகள் கைகேயி என்று இரகு வம்சம் (சருக்கம்-11, 17) தெரிவிக்கிறது.

கோசலை நான்கு பிள்ளைகளையும் 'தன் பிள்ளை இவன்', 'மற்றவர் பிள்ளைகள் இவர்கள்' என்னும் எண்ணமின்றி எல்லோரையும் சமமாகக் கருதினாள். அவளை மற்ற இருவரிடமிருந்து பிரித்துக் காட்டும் பண்பு அவள் பிள்ளைகளிடம் கொண்ட அளவற்ற அன்பு ஆகும். கம்பர் அவளை, 'நால்வர்க்கும் மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்' (1609) என்று குறிக்கிறார்.

கோசலை கேகயத்திலிருந்து திரும்பிய பரதனிடம் கைகேயியின் வஞ்சனையை அறியாயோ என்று வினவினாள். அவன் அது கேட்டுக் குமுறினான். 'யான் அவ்வஞ்சனையை அறிந்திருந்தால் பற்பல தீமைகள் செய்த பாவத்தை அடைவதற்குரியவன் ஆவேன்' என்று சூரைத்தான்.

அவன் கூறியவற்றைக் கேட்டுக் காட்டுக்குச் சென்ற ராமன் திரும்பி வரக்கண்டதுபோல மகிழ்ந்து அன்பினால் அழுது அவனைத் தழுவிக் கொண்டாள். அவள் மார்பகத்திலிருந்து பால் உக, விம்மி விம்மி அவனோடு பேசினாள் என்கிறார் கம்பர்.

இத்தகைய தன்மை தாயன்பு மிக்கவர்களிடம் காணப்படுவது ஒன்றாகும். திருஞானசம்பந்தரைக் கண்ட மங்கையக்கரசியார் இத்தகைய நிலையினை அடைந்தார் என்கிறார் சிவப்பிரகாசர் தம்முடைய 'நால்வர் நான்மணி மாலை'யில்.

இதனால் அன்பின் மிக்க மாதர்கள் கோசலை மனத்தை ஒத்தார்கள் என்று கூறுவதே பொருத்தமாக அமையும். அன்பு என்பதனை அற்பு என்று வழங்குவது பொதுவாகக் கவிஞர்களிடம் சிறப்பாகக் கம்பரிடமும் காணப்படும் போக்கு ஆகும்.

**'அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்**
**கற்பின் நின்றன கால மாரியே'(90)**
**'அற்பின் நல் திரைபுரள் ஆசை வேலையினான்' (3344)**
**'தற்பிரிந்து அருள்புரி தருமம் போலியை**
**'அற்பின் அத் தலைவனும் அமைய நோக்கினான்' (10011)**

என்று சில இடங்களில் அன்பினை அற்பு என்று குறித்துள்ளார். இவ்விடங்களில் எல்லாம் எதுகை நோக்கி அவ்வாறு அமைந்துள்ளன. இப்பாடலில் எதுகை நோக்கி அவ்வாறு அமையாமல் ஓசையின்பம் நோக்கி அவ்வாறு அமைந்துள்ளது.

முதலடியின் பிற்பாதி 'கோசலை மனத்தை ஒத்தார்' என்று வல்லொற்றுப் பெற்று வருவதால் அதற்கேற்ப வல்லோசை அமைந்தால் இனிமைபயக்கும் என்பதால் அற்பின் என்று பெய்துள்ளார்.

பாடவேறுபாடுகள் பெரும்பாலும் ஓர் எழுத்தைப் பிறிதோர் எழுத்தாகக் கொள்வதால் நிகழ்வன. அதனினும் குறைவாக ஒரு சீருக்கு மாறாக மற்றொரு சீரினைப் பெய்வதாலும் அதனினும் மிகக் குறைவாக ஓர் அடிக்கு மாறாக வேறோர் அடியினை மறதியால் அமைப்பதாலும் நேரிடுகின்றன.

எழுத்து மாற்றத்தால் ஏற்படும் பாட வேறுபாடுகள் மிகுதியும் ஏட்டில் உள்ள எழுத்தினைத் தவறாகக் கொள்வதால் நிகழ்வனவாகும். இப்பாட்டில் 'மாதர் களற்பின்' என்பதைத் தவறாக 'மாதர் கள் கற் பின்' என்று படித்ததால் பிழை நேர்ந்துள்ளது. ரசிகமணி 'கற்பின்' என்பது பிழை என்று கண்டறிந்தார். நோய் முதல்நாடி அறியும் தேர்ந்த மருத்துவர்போல ஆனால், அதற்கு மாற்றாக அவர் பரிந்துரைத்த மருந்து வீரியம் மிக்கதாக இல்லை. நோய் கண்டறிந்து சொன்ன மருத்துவரைப் போற்றி, அப்பாட்டினை,

**மாதர்கள் அற்பின் மிக்கார்**
**கோசலை மனத்தை ஒத்தார்;**
**வேதியர் வசிட்டன் ஒத்தார்;**
**வேறுள் மகளிர் எல்லாம்**
**சீதையை ஒத்தார்; அன்னாள்**
**திருவினை ஒத்தாள்; அவ்வூர்ச்**
**சாதுவ மாந்தர் எல்லாம்**
**தயரதன் தன்னை ஒத்தார்.**

என்று படித்து மகிழ்வோமாக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அசலில் இரு அஜீத்



நொறுங்க கட் பண்ணிய தலைமுடி, அதில் ஆங்காங்கே எட்டிப்பார்க்கும் வெள்ளை முடி, மூன்று நாள் தாடி... இப்படி இமேஜ் பற்றி எவ்வித கவலையும் படாத அஜீத், கசங்காத கோட் சூட்டுடன் கம்பீரமாக வந்திறங்கிய இடம் கலைமகன் சிவாஜியின் அன்னை இல்லம்! அசல் படத்தின் ஓடியோ வெளியீட்டு விழாவை இங்குதான் நடத்தினார்கள். அந்தக் காலத்திலிருந்து பத்திரிகையாளர்களைத்தான் எங்களின் நெருங்கிய சொந்தங்களாக நினைக்கிறோம். அதனால் உங்கள் முன்னிலையில் இந்த விழா நடக்கிறது என்றார் ராம்குமார். அசல் உருவான விதத்தை ஒரு படம் போலவே விவரித்தார் டைரக்டர் சரண். யாருக்கும் இது வரை சொல்லாத எக்ஸ்க்ளூசிவ் தகவல் என்று அவர் சொன்ன விடயம், படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறாராம் அஜீத். அப்பா மகன் என்ற இரண்டு வேடங்கள். அஜீத்தை கட்டணையிடுகிற மாதிரி வேடம் என்பதால், இதற்கு பொருத்தமாக யாரை நடிக்க வைக்கலாம் என்று ஏராளமான யோசனை சரணுக்கு. லண்டனில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்ததாம். திடீரென்று, 'நானே அந்த இன்னொரு வேடத்திலும் நடித்துவிடுகிறேனே' என்றாராம் அஜீத். பிறகென்ன? அஜீத்திற்கே அப்பாவாகிவிட்டார் அஜீத்! இப்படத்தை பார்க்கிற ரசிகனுக்கு படத்தில் வருகிற வேடத்தை குறிக்க வேண்டும். அதே பாடல் சிவாஜி கணேசனை குறிப்பதாகவும் இருக்க வேண்டும். இப்படி ஒரு நிபந்தனையை சரண் சொல்ல, கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய பாடல் ஒன்று பரத்வாஜின் குரலில் ஒலிக்கிறது. நிஜமாகவே உயிரை உருக்கும் பாடல் அது. எங்கே எங்கே என்று இன்னொரு பாடல். 'சினிமாவில் என்னை முதுகில் குத்தியவர்கள் நிறைய பேர்' இந்த பாடல் வரிகளை கேட்கும் போது எனக்கு அந்த நினைவெல்லாம் வந்தது என்றார் அஜீத்.

## Saturday சினிமா

# தைப்பொங்கல்



# 'ஆறாவது வனம்'


பொள்ளாச்சி அருகேயுள்ள ஒரு கிராமத்தில், ஒரே ஒரு மனிதர் மட்டும் வாழ்ந்த உண்மைச் சம்பவம்; 'ஆறாவது வனம்' என்ற பெயரில் படமாகி இருக்கிறது. 'காதல் அழியும்போது இந்த உலகம் அழியும்' என்ற கருவை அடிப்படையாகக் கொண்ட கதை இது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் கடந்து சென்ற காட்டுப்பகுதிகளில் 'ஆறாவது வனமும்' ஒன்று. கொடூரமான அசுரர்களைக் கொண்ட பகுதி அது. இந்தப் படத்தில் ஜாதி வெறி பிடித்த மனிதர்கள் வாழும் பகுதியாக 'ஆறாவது வனம்' சித்திரிக்கப்படுகிறது. புதுமுகங்கள் பூசன், வித்யா ஆகிய இருவரும் கதாநாயகன்-கதாநாயகியாக நடிக்க போஸ் வெங்கட் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கதையில் வரும் பெரும்பாலான கதாபாத்திரங்களும் முரட்டுத்தனமானவர்கள் என்பதால் கதாநாயகி உட்பட சிலர் முரட்டுத்தனமான தோற்றம் கொண்டவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். எஸ்.தாஜ் ஒளிப்பதிவு செய்ய, ஹரிபாபு இசையமைத்து இருக்கிறார். கதை-திரைக்கதை-வசனம்-இயக்குநர்: ஆர்.புவனேஷ். இவர், பார்த்திபனிடம் உதவி இயக்குநராக இருந்தவர். எம்.பி.ஜி.பிலிம்ஸ் இண்டர் நெஷனல் சார்பில் எஸ்.எம்.தியாகராஜன் இந்தப்படத்தை தயாரித்துள்ளார்.

இந்தப் புத்தாண்டை 'சின்னத்திரை' நட்சத்திரங்கள் ஆட்டபாட்டத்துடன் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். இந்தக் கொண்டாட்டம் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்தது. திரையில் தானும் அழுது எல்லோரையும் அழவைத்த ஒரு நடிகை ஆடியதை சக நட்சத்திரங்கள் அத்தனை பேரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

'ஞ்சி' நடிகைக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகின்றன. இன்னும் குழந்தைப் பாக்கியம் இல்லை. இவர் சென்னையிலும் கணவர் வட இந்தியாவிலும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். இனியும் இப்படிப் பிரிந்து இருக்கக்கூடாது என்று கருதிய 'ஞ்சி' நடிகை வட இந்தியாவில் எல்லை காவல் பணியில் இருக்கும் கணவருடன் போய் இணைந்து விட்டார்.

வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எந்திரன்
ரஜினிகாந்த் - ஐஸ்வர்யா ராய்

# திருமதியாகும் ஷகிலா



தமிழ்-மலையாளம் ஆகிய 2 மொழி படங்களிலும் கவர்ச்சி வேடங்களில் நடித்து வந்தவர் ஷகிலா. சில படங்களில் நகைச்சுவை வேடங்களிலும் நடித்து இருக்கிறார். இவர் சென்னையைச் சேர்ந்த ஒரு தொழில் அதிபரைக் காதலித்து வருவதாகவும் அவரையே திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் ஜூன் மாதம் திருமணம் நடைபெற இருப்பதாகவும் சில நாட்களுக்கு முன் கூறினார். தனது காதலரின் பெயரை ஷகிலா இரகசியமாக வைத்து இருந்தார். திருமணம் நடைபெறப்போகும் நேரத்தில் அவருடைய பெயரை தெரிவிப்பதாகக் கூறியிருந்தார். இப்போது ஷகிலாவின் காதலர் பெயரும் அவர் யார்? என்பதும் தெரியவந்துள்ளது. ஷகிலாவின் காதலர் பெயர் சதீஷ், ரியல் எஸ்டேட் தொழில் செய்வதுடன் ஆவடி தே.மு.தி.க.பிரமுகராகவும் இருக்கிறார். ஷகிலாவை திருமணம் செய்துகொள்வது பற்றி சதீஷ், 'நானும் ஷகிலாவும் கடந்த 3 வருடங்களாக காதலித்து வந்தோம். எங்கள் திருமணத்துக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இரு வீட்டார் சம்மதத்துடன் எங்கள் திருமணம் நடைபெற இருக்கிறது. நான் சின்ன வயதில் இருந்தே விஜயகாந்த் ரசிகர். அவர் தே.மு.தி.க. கட்சியைத் தொடங்கியதும் அதில் சேர்ந்தேன். வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் ஆனேன். ஷகிலாவுக்கும் எனக்கும் விஜயகாந்த் தலைமையில்தான் திருமணம் நடைபெறும். அவருடைய திகதிக்காகத்தான் காத்திருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# நடிகையான த்ரிஷா

த்ரிஷா இதுவரை எத்தனையோ வேடங்களில் நடத்துவிட்டார். ஆனாலும், நடிகையாக அவர் இதுவரை எந்தப் படத்திலும் நடித்ததில்லை. அந்தக் குறையை போக்கியிருக்கிறது விண்ணைத்தாண்டி வருவாயா. கௌதமின் இந்தப் படத்தில் கேரளாவிலிருந்து தமிழில் நடிக்கவரும் இளம் நடிகை வேடத்தில் த்ரிஷா நடித்துள்ளார். நடிகையாக இது அவருக்கு முதல் அனுபவம். த்ரிஷா நடிக்கும் படத்தில் உதவி இயக்குனராக பணிபுரிபவர் சிம்பு. இருவருக்கும் ஒரு கட்டத்தில் காதல் ஏற்படுகிறது. காதல் கூடலில் முடிந்ததா, ஊடலில் பிரிந்ததா என்பது கதை. தனது வாழ்வில் நடந்த சம்பவம்தான் விண்ணைத்தாண்டி வருவாயா என்று கூறுகிறார் கௌதம். அதாவது அவரது சொந்த காதல் கதை. காதல் யூனிவர்சல் சப்ஜெக்ட் என்பதாலா தெரியவில்லை படத்தின் பிரிமியரை நியூயோர்க்கில் நடத்த திட்டமிட்டிருக்கிறார். படத்தின் கிளைமாக்ஸ் உள்பட பல முக்கிய காட்சிகள் நியூயோர்க்கில்தான் எடுக்கப்பட்டன.



பையா - தமன்னா

# மீண்டும் அழகான நயன்

ஐயா படத்தில் அறிமுகமானபோது பாவாடை-தாவணியில் வந்த தமிழ் ரசிகர்களின் கனவுக்கன்னியானவர் நயன்தாரா. அடுத்தடுத்த படங்களில் ஆடைக்குறைப்பு செய்த நயன்தாரா பில்லா படத்தில் டூ-பீஸ் தரிசனத்தையும் கொடுத்தார். சிம்பு, பிரபுதேவா என அடுத்தடுத்து சர்ச்சைகளில் சிக்கிய நயன்தாரா அடுத்தடுத்து நடித்த படங்களில் அழகை பறிகொடுத்தார். கொழுகொழு பேபியாக இருந்த அம்மணி இப்படிக்காய்ந்து போன கருவாடு போல இருக்கிறாரே என்று சலித்துக் கொண்டனர் ரசிகர்கள். இந்த நேரத்தில்தான் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தில் நடிக்க ஒப்பந்தமானார் நயன். இதில் ஆர்யாவுடன் ஜோடி போட்டிருக்கும் நயன் ஆரம்ப கால நயனைப் போலவே ஜொலிக்கப் போகிறாராம். இயக்குநர் ஷக்தி, கமராமேன் சக்தி சரவணன் ஆகியோர் நயன்தாராவைப் பக்கத்து வீட்டு பெண்ணைப் போல திரையில் காட்ட முயற்சி மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். முதல் ஷெட்யூலில் எடுக்கப்பட்ட அசத்தலான புகைப்படங்களைப் பார்த்த நயன்தாரா அடுத்த ஷெட்யூலில் ரொம்பவே ஆர்வமுடன் பங்கேற்று வருகிறார் என்பது மேலதிக தகவல்.

# 'அவதார்' வசூலில் சாதனை

பிளாக் பஸ்டர் என்ற சொல்லுக்கு சரியான அர்த்தம் என்னவென்று ஜேம்ஸ் கேமரூன் காட்டியுள்ளார். 'இதுதான்டா படம்' என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டாட அனைத்துத் தகுதிகளும் நிறைந்த படம் 'அவதார்' தான் என ஊடகங்கள் எழுதி வருகின்றன. இந்த நிலையில் இப்போது வசூலிலும் இந்தப் படம்தான் கிங் என்று சொல்லும் ஒரு அபார சாதனையை நிகழ்த்தியுள்ளது அவதார். வெளியான 17 நாட்களில் 1 பில்லியன் டொலர் என்ற வசூல் சாதனையைப் படைத்துள்ளது அவதார். இந்தப் படம் தயாரிக்கச் செலவிடப்பட்ட தொகை 237 மில்லியன் டொலர்கள். கொட்டும் பனி வேளை நெருக்கடி எதுவுமே இந்தப் படத்தின் வசூலைப் பாதிக்கவில்லை. அதுவும் புத்தாண்டு தினத்தில் அமெரிக்கா-கனடாவில் மட்டும் 69 மில்லியன் டொலர்களை குவித்துள்ளது அவதார். மூன்றாவது வாரத்தில் 1,018,811,000 டொலர்களை வசூலித்து புதிய சாதனை படைத்துள்ளது இந்தப் படம். கேமரூன் இதற்கு முன்பு எடுத்த டைட்டானிக் கடந்த 12 ஆண்டுகளில் 1.84 பில்லியன் வசூல் செய்துள்ளது. இதுவே இன்றுவரை உலகில் அதிகம் வசூல் செய்த படம். ஆனால், அடுத்த ஒரு மாதத்தில் இந்த சாதனையை அவதார் முறியடித்துவிடும் என்று நம்புவதாக விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். இன்றைய திகதிக்கு உலக சினிமா வரலாற்றில் அதிக வசூலைக் குவித்த நான்காவது படம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது அவதார்.




# அஜீத் - விஷால் மோதல்

பேச்சுவார்த்தை முடிந்து சன் பிக்சர்ஸ் கைக்கு போய்விட்டது தீராத விளையாட்டு பிள்ளை. விஷாலின் பேரார்வம் இந்தப் படம் பொங்கலுக்கு வர வேண்டும் என்பதுதான். ஆனால், வெளியாகும் திகதியை நாங்கள்தான் முடிவு செய்வோம். அதில் தலையிடக் கூடாது என்ற நிபந்தனையோடுதான் இந்த படத்தையே வாங்கினார்களாம். சன்னில் இப்போ இருக்கிற சூழ்நிலையில் எந்த நாயகன் நடிச்ச படமும் அதிக பட்சம் ஐந்து வாரம்தான். அதுக்கு பிறகு 100 நாட்கள் ஓடும் என்பதெல்லாம் ஒரு பேச்சுக்கு சொல்லப்படுகிற வார்த்தைதான் என்று ஒரு விழாவில் வெளிப்படையாக பேசினார் சன் பிக்சர்ஸ் சக்சேனா. இந்த ஐந்து வாரங்களுக்கு தேவையான விளம்பரங்களை விதவிதமாக வெளியிட்டு ரசிகர்களை கவர்கிற அவர்களது யுக்திக்குதான் திரையுலகம் அடிமையாகி கிடக்கிறது. இந்த நேரத்தில் விஷால் எடுத்திருக்கும் இந்த முடிவு புத்திசாலித்தனமானது என்கிறார்கள் திரையுலகில். அது போகட்டும்... திரையுலகத்தினரின் யூகத்தின்படி தீ.வி.பி.எப்போதுதான் திரைக்கு வருமாம்? அஜீத்தின் அசல் திரைக்கு வரும் போது இப்படமும் வரும் என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# நாராயன் டத் திவாரி

உலக அரசியல்வாதிகளில் ஒரு சிலர் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி வந்தாலும் அவர்கள் தமது குற்றச்சாட்டுக்களை நிராகரித்து தொடர்ந்தும் பதவியைத் தக்கவைத்துக் கொள்கின்றனர்.

இந்நிலையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தியாவில் ஒளிபரப்பப்பட்ட ஒரு வீடியோத் தொகுப்பில் ஆந்திர ஆளுநர் என்.டி.திவாரி மூன்று பெண்களுடன் குலாவும் காட்சி ஒளிபரப்பாகியது.

கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி ஹைதராபாத்தை தளமாகக் கொண்டியங்கும் எபிஎன் ஆந்திரா நியூஸ் தொலைக் காட்சி சேவையிலேயே ஆளுநர் திவாரி மூன்று பெண்களுடன் படுக்கை அறையில் இருந்த காட்சி ஒளிபரப்பப்பட்டது.

இந்திய அரசியலில் பல்வேறு படிநிலைகளைக் கடந்து ஆந்திர ஆளுநரான திவாரி தனது 86 ஆவது வயதில் பெண்களுடன் சல்லாபித்திருந்த அக்காட்சி ஒளிபரப்பப்பட்டதை அடுத்து யூ-ரியூப் உள்ளிட்ட பிரபல இணையத்தளங்களில் அக்காட்சி பதிவாக்கம் செய்யப்பட்டு விட்டது.

ஆனால் அக்காட்சியை மீண்டும் மீண்டும் ஒளிபரப்புச் செய்யவேண்டாமென ஆளுநர் மாளிகை உத்தரவிட்டிருந்த நிலையிலும் அக்காட்சி இணையத்தளங்களில் உலாவரத் தொடங்கிவிட்டது.

இதனைத் தொடர்ந்து இக்குற்றச்சாட்டும் வீடியோக் காட்சியும் சித்தரிக்கப்பட்டவை என நிராகரித்த ஆளுநர் வட்டாரம் அப்பெண்கள் மூவரும் ஆளுநர் மாளிகையில் பணிக்கமர்த்தப்பட்டவர்களென்றும் கூறியது.

ஆனால் இப்பெண்கள் விபசாரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் என்றும் திவாரியின் சொந்த ஊரிலிருந்து அனுப்பப்பட்டவர்களென்பதும் ராதிகா என்ற பெண் மூலம் தெரியவந்தது.

இந்நிலையில் பெண்களுடன் பாலியல் தொடர்பு கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த திவாரி தனது உடல் நிலை காரணமாக பதவியை இராஜிநாமாச் செய்வதாக டிசம்பர் 26 இல் ஜனாதிபதி பிரதீபா பட்டீலுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

தனது 86 ஆவது வயதில் மூன்று பெண்களுடன் ஒரே நேரத்தில் குலாவிக் கொண்டிருந்த திவாரி குறித்து இந்திய அரசியலில் அதிருப்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அரசியலில் பிரவேசித்தது முதல் ஆந்திர ஆளுநராகி கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி மூன்று பெண்களுடனான பாலியல் சர்ச்சை வரையான திவாரியின் பாதையை திரும்பிப்பார்ப்போமாயின்;

நைனிதால் மாவட்டத்தில் பாலுதி கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி பிறந்த திவாரி பல பாடசாலைகளில் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்விகளைத் தொடர்ந்து தனது இளமைப் பருவத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக துண்டுப்பிரசுரங்கள் எழுதி விநியோகித்தமைக்காக வெளிநாட்டுத் துருப்புக்களால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் 1944 இல் விடுதலை செய்யப்பட்ட பின் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் அரசியலில் எம்.ஏ.பட்டமும் எல்.எல்.பி.பட்டமும் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து 52 இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் சட்டசபை உறுப்பினராகி எதிர்க் கட்சித் தலைவரானார். அதனைத் தொடர்ந்து 1954 இல் திருமண பந்தத்தில் இணைந்தார் திவாரி.

தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு தேர்தல் மூலம் உத்தரபிரதேச அமைச்சராக இந்திய காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

அத்துடன் மூன்று தடவைகள் உத்தர பிரதேசத்தின் ஆளுநராகப் பதவி வகித்து 1990 இல் இந்தியப் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டு நரசிம்மராவினால் தோற்கடிக்கப்பட்டார்.

பின்னர் பல்வேறு அரசியல் நிலைகளை அடைந்து வந்த திவாரி 2007 இல் ஆந்திர பிரதேஷ் ஆளுநரானார்.

அன்றுமுதல் கடந்த 2009 டிசம்பர் 26 வரை ஆந்திர ஆளுநராக பதவி வகித்து பாலியல் குற்றச்சாட்டுகளின் மத்தியில் தனது உடல் நிலையைக் காரணம் காட்டி பதவியை இராஜிநாமாச் செய்தார்.

தனது 17 ஆவது வயதில் இருந்த இளமைத் துடிப்பினால் பிரிட்டிஷாருக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமைக்காக 15 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த திவாரியின் இளமைத் துடிப்பு 86 ஆவது வயதிலும் தீரவில்லை போலும்.

**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈமெயில் காதல்

புதிதாக வந்தது
ஒரு மின்னஞ்சல்
திறந்து பார்த்தேன்
அறியாத புதிய விலாசம்

அன்புடன் பதில்
போடவும் என்று இருந்தது
போட்டுத்தான் விட்டேன்
அந்த அன்புடன்

வாரம் மாதமாக
மாதம் வருடமாக
நட்பு இறுக்கமாக
உள்ளம் காதலாக

திடீரென வந்திறங்கினார்
மின்னஞ்சலைவிட்டு
இந்த அஞ்சலி முன்
ஓர் இளைஞன்

அப்போது தெரியாது
அது யார் என்று
இப்போது தெரிகிறது
அவன் என் துணைவன் என்று

**சுபா , மானிப்பாய்.**

## வாழ்வுக்காய்...!

தண்ணீரை
பிரித்து விட்டால்
அலைகள் இல்லை!
அலைகளை தர மறுத்தால்
அது கடலும் இல்லை!

கண்ணீர்க் கடல்
கடக்க தயங்கி நின்றால்
வாழ்க்கை இல்லை!
வியர்வையை தேகம் வெறுத்
துவிட்டால்
உயர்வும் இல்லை!

தறி கெட்டு வாழ்வது
நிலையும் இல்லை!
நெறி கற்று வாழ்ந்துபார்
அழிவும் இல்லை!

தோல்விகள் தொட்டுத்தான்
மின் குமிழ்கள் சிரிக்கிறது!
இடறும் கற்கள்தான் படிகள்
ஆகிறது! படிகள் நமக்கொரு
பாடம் சொல்கிறது!

இரத்தத்தை பார்த்து
அருவருத்தால்
வரலாறு நம் பெயரை
புறக்கணிக்கும்! சிறு
புழு என்று புற முதுகில்
எழுதி வைக்கும்!

சிறு துளிதான் கடல் என்
றால்
உன்னிடம் பெரு வெள்ளம்
இருக்கிறது!
ஒரு பொறி தான் நெருப்
பென்றால்
உனக்குள்ளே எரிமலை
இருக்கிறது!

சாக்கடைக்குள்
ஒளிந்து கொண்டு-நீ
பூக்களின் வாசம்
தேடுகிறாய்-புழுக்கள் தான்
புத்தியில் கூடு கட்டும்!

அறியாமை எனும் சாக்க
டையை
என் பேனா முனை
தோண்டிக் கொண்டிருக்கும்
அறிவுள்ள மனிதா எழுந்து
வா...

வாழ்வுக்காய் தோள்
உயர்த்து!
வாழ்வுரிமைக்காய் வாள்
உயர்த்து!
வரலாறு முதுகில் அல்ல
மார்பில் எழுதும்-நீ
வீரன் என்று!

**எஸ். அனுராஜ்,**
**வண்ணார்பண்ணை.**




## க(ா)ளையான என் வாழ்வு நிலைக்குமோ?

நீ அடி மீது அடி
வைக்கும்போது என்
நெஞ்சில்
இடி மீது இடி
வீழ்ந்ததேனோ!
கடை பார்வை காதோரம்
வீழ்கின்ற போது கார்குழல்
தான் மறைப்பதுமேனோ!
நீள் பார்வை நிழலடி
நினைவை
நீங்காது நினைத்திருக்கும்
இளவல்
ஏங்காத நாளென்று
எண்ணினாயோ நன்று
வீழ்காணும் புனலென்று
வேய் குழலை வரித்திங்கு
வாழ்காலம் அனைத்தையும்
வரித்து விட்டேன்
தூங்காத கண்ணென்று
துடிக்கின்றபோது
தாங்காது உன் எண்ணம்
தளையுமோ என் எண்ணம்!

**செல்வநாயகம் ரவிசாந்,**
**வீரமனை,குப்பிளான்.**

## பருத்தி மாநகரே...!

பருத்தியே நீதான் எம் நெஞ்சில்
நிறுத்தி நிற்கிறாய்,
அணிசெய்யும் ஆலயங்கள்
அன்பின் பாலங்கள்,
கடலலைகள் 'கபடி' ஆடும்
நடராஜர் அரங்கம்,
கல்விப் பாரம்பரியம் பேணும் கல்லூரிகள்,
நாளையை சேமிக்கும் வங்கிகள்,
வாணிப நிலையங்கள் என வகை வகையாய்
தேவையறிந்து நிவர்த்திக்கும்
தேவதச்சர்களே உன்னை நிர்மாணித்து
ஆட்சிபுரிவதாக புலப்பாடு எனக்கு உண்டு.
கட்டடங்களால் தானோ நீ முழுமை கொண்டாய்?
இல்லவே இல்லை!
'நன்மக்கள் வாழும் நிலமே நன்நிலம்' என்று சொன்ன
ஔவை இன்றிருந்தால்
பருத்தி மாநகரே...!
உன்னையும் பட்டியலில் சுட்டியிருப்பாள்.
சாக்கடை அள்ளும் கைகளுக்கு
சந்தனம் பூசுவோம்,
சாலை மருங்குகளில் மரங்கள் நாட்டுவோம்
மேடுபள்ளம் எனும் பேதங்கள் -உன்
மேனியில் கூட மறைந்து போகட்டும்.
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக
வளர்ந்தாலும்
அனுபவரேகைகளும் அழகு ஊட்டுகின்றன;
இளைப்பை போக்கும் திண்ணைகள்,சுமைதாங்கிகள்,
அஃறிணைக்கும் பேதமின்றி ஆவுரோஞ்சிகற்கள்...
சுனாமியிலும் நீ சுருண்டுவிடவில்லை
சுதாரித்துக்கொண்டாய்-ஏன்
'நிஷா'விலும் நிமிர்ந்து தானே நின்றாய்!
சுதந்திரப் பறவையாய் செகத்தைச் சுற்றினாலும்
அந்திம காலத்தைச் செலவிட
ஆவினைத் தேடிவரும் கன்றினைப் போல
ஓடோடி வருவேன்
ஆறடி நிலம் கொடு- உனக்குள்
உரமான உவகையோடு போவேன்.

**தி.கமலசுதர்சன்,**
**தும்பளை.**

## இன்பம்



செந்தமிழ் தேன் கவிதை
செப்புதல் இன்பம்
செவிகுளிர அது கேட்டு
இரசிப்பது இன்பம்


காதல் கொண்டவளை
காண்பது இன்பம்
அவள் பார்வை
என் மீது படுதல் இன்பம்

இருமனதும் ஒருமனதாய்
இணைதல் இன்பம்
என்னவளை கைப்பிடிக்கும்
என் நினைவுகள் இன்பம்
அந் நினைவினால்-நான்
ஏங்குவது இன்பம்
ஏக்கத்தில் தூக்கம்
கெடுவது இன்பம்

**இணுவை சுகந்தி.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நியூஸ்வீக் சஞ்சிகை ஆசிரியரின் நூல் நேபாளத்தில் ஏற்படுத்தியிருக்கும் சர்ச்சை

புத்தபெருமான் இந்தியாவில் பிறந்ததாக சித்திரிக்கும் "*Chandni Chowk To China*' என்ற பொலிவூட் திரைப்படம் கடந்த வருடம் நேபாளத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

அமெரிக்காவின் *News Week* சஞ்சிகையின் ஆசிரியர் பரீத் சகாரியா எழுதியிருக்கும் *"Tha Post American World'* என்ற நூலில் புத்தரின் பிறப்பு குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்து மீண்டும் நேபாளத்தில் சர்ச்சையை மூளவைத்திருக்கிறது.

இந்திய அமெரிக்கரான சகாரியா சி.என்.என். தொலைக்காட்சி சேவையில் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான வாராந்த நிகழ்ச்சியொன்றையும் நடத்திவருகிறார். புத்த பெருமான் ஒரு இந்தியராகவும் பௌத்தமதம் இந்தியாவில் தோன்றியதாகவும் இருக்கின்ற போதிலும் உபகண்டத்திலே உண்மையான பௌத்தர்கள் என்பது எவருமேயில்லை என்று அந்தப் புத்தகத்தில் சகாரியா குறிப்பிட்டிருக்கிறார்.

இது தொடர்பாக நேபாள பாராளுமன்றத்தில் ஒரு கமிட்டி ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. அத்துடன் இந்தவிவகாரம் ஜனாதிபதி ராம் பரன் யாதவினதும் வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சர்களினதும் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சகாரியாவின் புத்தகம் கடந்தவருடம் மே மாதத்தில் வெளியிடப்பட்ட போதிலும் நேபாளத்தை வந்தடைய பல மாதங்கள் சென்றது. பௌத்தமதம் இந்தியாவில் பிறந்த தென்ற சகாரியாவின் கருத்தை ஆட்சேபித்து நேபாளத்தின் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சியின் பேச்சாளரான தினநாத்சர்மா அதிகவிற்பனையைக் கொண்ட தினசரியான கான்ரிபூரில் அறிக்கையொன்றை இவ்வாரம் வெளியிட்டதையடுத்தே புதியசர்ச்சை பகிரங்கத்துக்கு வந்தது.




புத்தரைப் பற்றிப் படிக்காமல் சகாரியா இதை எழுதியிருப்பார் என்று நாம் நம்ப வேண்டுமா என்று பாராளுமன்ற உறுப்பினருமான சர்மா கேள்வியையெழுப்பியிருக்கிறார்.

சகாரியா அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகப்பட்டதாரி. அத்துடன் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் பி.எச்.டி.பட்டமும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சகல மதங்களையும் பற்றி நுணுக்கமாக ஆராயும் ஒரு நபர் புத்தர் எங்கே பிறந்தார் என்பதைக் தெரியாதிருப்பார் என்று எவராலும் கூறமுடியுமா? புத்தர் இந்தியாவில் பிறந்ததாக தவறான தகவலைப் பரப்புவதற்காக 'துரோகிகளினால் மேற்கொள்ளப்படும் பிரசாரத்துடன்' தொடர்புடையதே சகாரியாவின் கருத்து என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பொய்யைப் பிரசாரப்படுத்தும் நோக்கில் இந்தியாவில் சிலபாடப்புத்தகங்களிலும் புத்தர் இந்தியாவில் பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் 'போலி லும்பினி'யை நிர்மாணிப்பதற்கு இந்தியாவின் எல்லைப் பகுதியில் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இது இந்திய அரசாங்கத்தின் விஸ்தரிப்புவாதக் கொள்கையின் ஒரு வெளிப்பாடேயாகும் என்று சர்மா பத்திரிகை அறிக்கையில் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்.

புத்தபெருமானைப் பற்றி இதேபோன்ற கருத்தை வெளியிட்ட மூன்றாவது அமெரிக்கர் சகாரியா என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க எழுத்தாளரான சார்ல்ஸ் வான் டோரன் எழுதியிருந்த "*A History of Knowledge, Past, Present and Future*' என்ற புத்தகத்திலும் இன்னொரு பிரபல அமெரிக்க எழுத்தாளரான அமிரான் 2005 இல் எழுதிய *Saving Fish From Drowning* என்ற நாவலிலும் புத்தர் இந்தியாவில் பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. சார்ள்ஸ் வான் டொரனின்புத்தகம் நேபாளத்தில் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கான பாடப்புத்தகமாக விதந்துரைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தம் காதலா? காமமா?



ஆண்களின் காதல் காமத்தை நோக்கியது பெண்களின் காமம் காதலை நோக்கியது என்று கூறுவார்கள். இந்நிலையில், ஆண்களும் பெண்களும் முத்தமிடுதலின் வேறுபாடுகள் பற்றி நியூயோர்க் நகர பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றில் சுவாரஸ்யமான பல முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. அதாவது முத்தத்திற்குப் பெண்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆண்கள் கொடுப்பதில்லை என்பது அவற்றில் ஒன்று.

பெண்கள் முத்தத்தை தங்கள் இணை வாழ்க்கை உறவின் ஒரு அங்கமாகக் கருதுகின்றனர். காதலை அர்த்தப்படுத்திக் கொள்ளவும், தங்கள் நீண்டகால உறவினை அவ்வப்போது புதுப்பித்துக்கொள்ளவும் அதன் நிலைப்பாட்டைச் சரி செய்து கொள்ளவும் முத்தத்தையே விரும்புகின்றனராம். ஆனால், ஆண்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு முத்தம் என்பது நீண்டகால உறவினைப் புதுப்பிக்கப் பயன்படும் ஒன்றாக இல்லை. காதல் உறவின்போது முத்தம் ஒரு உற்சாகம் கொடுக்கப் பயன்படுகிறது. ஆசை அதிகரிக்கும் போது ஒரு அடையாளமாக வெளிப்படுகிறது.

ஆண்களும் பெண்களும் முத்தத்தை மிகவும் ரசிக்கிறார்கள். என்றாலும் பெண்களே அதற்கு ஒரு முன்னுரிமை வழங்குகிறார்கள். முத்தமே இல்லாத உடலுறவைக் கூட ஆண்களால் நிகழ்த்திவிட முடியும். ஆனால், பெண்களுக்கு அப்படியல்ல. இணை வாழ்க்கை நாட்கள் நீள நீள முத்தத்தின் முக்கியத்துவம் ஆண்களிடம் குறைந்து விடுகிறது. ஆனால், பெண்களிடம் அது உயிரோட்டமாய் இருக்கிறது. தாமதம் வேண்டாம். தயக்கம் வேண்டாம். உங்கள் துணையின் நேசத்தை அவ்வப்போது முத்தத்தால் அங்கீகரியுங்கள்.

# தேர்தல் போட்டியில் நடன அழகி



இங்கிலாந்தில் விரைவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் ஒருவர் ஹோட்டலில் ஒரு குத்துப்பாட்டுக்கு நடனமாட இலங்கை பணத்தின் ரூபா 60 ஆயிரம் வாங்குகிறார்.

இங்கிலாந்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இப்போது ஆளுந்தொழிலாளர் கட்சி சார்பில் ஷெல்சியா தொகுதி வேட்பாளராகத் தேர்வாகி இருந்தவர் நார்ஷீன் பாத்டீ. [வயது 33]. வேட்பாளர் தேர்வு கடந்த சில மாதங்கள் முன்பு நடந்தது. அதில் நார்ஷீன் தேர்வு செய்யப்பட்டார். அவர் அரசியலில் இருப்பதுடன், பகுதிநேரப் பணியாக ஹோட்டல்களில் குத்துப் பாட்டுக்கு நடனம் [பெல்லிடான்ஸ்] ஆடுபவர். ஒரு மணி நேர ஆட்டத்துக்கு ரூபா 60 ஆயிரம் வாங்குபவர் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

இதனால் நார்ஷீனை வேட்பாளராகத் தேர்வு செய்த தொழிலாளர் கட்சித் தலைவர் நிக் கிளக் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். நார்ஷீனின் பணியைக் காரணம் காட்டி வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்குவது பற்றி தொழிலாளர் கட்சி யோசித்தது. வாக்குக் கேட்கப்போகும் வேட்பாளர் உள்ளாடைகளுடன் இருக்கும் படங்கள் வெளியாவதை கற்பனை செய்ய முடியவில்லை என்று நிக் ஆதரவாளர்கள் தெரிவித்தனர். இதையடுத்து நார்ஷீனை அதேதொகுதியில் வேட்பாளராக்கத் தயார் என்று எதிர்க்கட்சியான பழைமைவாதக் கட்சி அறிவித்தது.



இதையடுத்து நார்ஷீன்,தொழிலாளர் கட்சியில் இருந்து விலகி பழமைவாதக் கட்சியில் சேர்ந்தார். இதுபற்றி லண்டனில் மிரர் நாளிதழில் சிலர் கூறியதாக வெளியான செய்தியில் நார்ஷீன் அழகான, திறமையான அரசியல்வாதி. அவரது பகுதிநேர தொழிலை காரணம் காட்டி எம்.பி. ஆகும் வாய்ப்பை மறுக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. பழைமைவாத கட்சியில் நார்ஷீனுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறட்டையைக் கட்டுப்படுத்த வருகிறது புதிய கருவி

குறட்டையை கட்டுப்படுத்த புதிய கருவி ஒன்றை பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தூங்கும் போது ஆண்கள் ஆனாலும் சரி,பெண்கள் ஆனாலும் சரி, ஒரு சிலரை தவிர மற்றவர்கள் அனைவருக்கும் குறட்டை வருவது வழக்கம். குறட்டை அவரவர் உடல் வாகுக்கு தகுந்தபடி இருக்கும். உடல் பருமனானவர்களுக்கு பொதுவாக குறட்டை சத்தம் அதிகமாக இருக்கும். ஒரு சிலர் விடும் குறட்டை சத்தத்தை பார்த்து வீட்டில் இருப்பவர்கள் தூங்க முடியாமல் வெளியில் செல்ல வேண்டி வரும். இந்த நிலையை போக்க, பிரிட்டன் விஞ்ஞானிகள் புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்து உள்ளனர். இது தற்கால விஞ்ஞானத்தில் ஒரு புரட்சி என்று கருதப்படுகிறது.




லண்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தீப்பெட்டி போன்ற ஒரு கருவியை கண்டுபிடித்துள்ளனர். இதை தூங்குபவர் மார்பில் பொருத்தும் போது, இதன் செயல்பாடுகள் இதய தசைகளை இயங்க செய்கிறது. அப்போது, இதயத்திலிருந்து வெளியேறும் காற்று எந்த தடையும் இன்றி வெளியேறுகிறது.

இதனால், குறட்டை நின்றுபோகும். இதில், பொருத்தப்பட்டுள்ள சுவிட்ச் மூலம், நாம் படுக்கைக்கு செல்லும் போது ஆன் செய்தும், எழுந்திருக்கும் போது ஆப் செய்தும் வைத்துக் கொள்ளலாம். இந்த சாதனம் தற்போது பரிசோதனையில் இருந்து வருகிறது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளது. இதனால், தூக்கம் கெட்டு தவிக்கும் லட்சோப லட்ச மக்கள் பயன் பெறுவர்.

# நிலவில் மிகவும் குளிர்ச்சியான பகுதி

இரவில் குளிர்ச்சி தருவது நிலவு. ஆனால் சூரிய குடும்பத்திலேயே வெதுவெதுப்பான கிரகம் சந்திரன் தான். இருந்தாலும் நிலவின் குளிர்ச்சியான பகுதி தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

நாசா விண்வெளி மையத்தின் எல்.ஆர்.ஓ. என்ற நிலவை ஆராயும் விண்கலம் இதை கண்டுபிடித்தது. நிலவின் தென் மேற்குப் பகுதி தான் மிகவும் குளிர்ச்சியாக உள்ளது. இரவில் மைனஸ் 234 டிகிரி செல்சியஸ் குளிருக்குச் செல்கிறது.



நிலவு 1.54 டிகிரி சாய்வாக இருந்து பூமியை சுற்றி வருகிறது. இதனால் வெப்பமும் அதிகமான குளிரும் நிலவுகிறது.


நில நடுக்கோட்டுப் பகுதியில் பகலில் 127 டிகிரி செல்சியஸ் வெப்பமும், அதே பகுதியில் இரவு மிக அதிகமான குளிரும் ஏற்படுகிறது. சூரியன் 6 மாதகாலம் பூமியின் தென் அரைக் கோளத்திலும், மற்ற 6 மாதம் வட அரைக் கோளப் பாதையிலும் சுற்றி வரும். சமீபத்தில் ஒக்டோபரில் தென் அரைக்கோளத்தில் பயணித்த போது வெப்ப அளவீடுகள் கணிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

நில நடுக்கோட்டின் தென் பகுதியில் மைனஸ் 238 செல்சியஸ் வரையும், தென்மேற்குப் பகுதியில் மைனஸ் 234 செல்சியஸ் வரையும் குளிர் நிலவுகிறது. ஆனால் வட பகுதியில் அதிக அளவில் வேறுபாடுகள் இல்லை.

பெரும்பாலான பகுதிகளில் வெப்ப மாற்றம் அதிகமாக வித்தியாசப்படுவதில்லை. நில நடுக் கோட்டுப் பகுதியில் மட்டும் சற்று அதிகமான

கிரகங்கள் நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவது இந்த மாறுபாட்டுக்கு காரணம் ஆகும். நிலவின் குளிர்ச்சியான தென்மேற்குப் பகுதிக்கு 'ஹெர்மைட்' என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# பெற்றோல் தயாரிக்கும் பக்றீரியா

எரிபொருள் ஒருபுறம் தீர்ந்து வருகிறது. மறுபுறம் மாசு பெருகி வருகிறது. எரிபொருளின் தேவையையும் பூர்த்தி செய்து மாசையும் கட்டுப்படுத்துகிறது ஒரு பக்றீரியா. அதிசயமாக இருக்கிறதா!

காற்றில் கார்பன்–டை–ஒக்சைடு அளவு அதிகரிப்பதால் மாசு பெருகி உள்ளது. இந்த கார்பன்–டை–ஒக்சைட்டை உறிஞ்சி பெற்றோலாக வெளியிடுகிறது இந்த பக்றீரியா. இதனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த மகிழ்ச்சியில் இருக்கிறயர்கள் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

சையனோ பக்றீரியம் என்ற பக்றீரிய நுண்ணுயிரியல் விஞ்ஞானிகள் செயற்கையாக சில மாற்றங்களை ஏற்படுத்தினர். இதற்காக பக்றீரியாவில் ருபிஸ்கோ என்னும் நொதி சேர்க்கப்பட்டது. அதன் பிறகு இந்த பக்றீரியாக்கள் கார்பன்–டை–ஒக்சைட்டை சுவாசித்து இசோப்புட்டால்டிகைடு என்ற வாயுவாக வெளியிடுகிறது. இதை எளிமையாக மாற்றி இசோப்புட்டனால் என்ற எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இது பெற்றோலுக்கு சிறந்த மாற்று எரிபொருளாகும்.

இதுவரை தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து மாற்று எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இதில் பல்வேறு மாற்றங்களைத் தாண்டி எரிபொருள் கிடைக்கும். ஆனால் இந்த பக்றீரியா முறையில் எளிமையாக குறைந்த செலவில் சிறந்த எரிபொருளை உற்பத்தி செய்ய முடிகிறது.

இதன் மேலும் ஒரு சிறப்பம்சமாக இந்த பக்றீரியாக்கள் சூரிய ஒளியை கிரகித்தும் எரிபொருளை உற்பத்தி செய்துவிடும். அதாவது சூரிய ஒளியில் இருந்து கார்பன்–டை–ஒக்சைட்டை பிரித்து பிறகு அதை இசோப்புட்டால்டிகைடாக மாற்றும்.

எனவே இந்த பக்றீரியாக்களைக் கொண்டு இரட்டை வழியில் நிறைய பெற்றோல் தயாரிக்க முடியும். இதனால் கூடுதலான பக்றீரியாக்களை உற்பத்தி செய்வதில் விஞ்ஞானிகள் முனைப்பு காட்டி வருகிறார்கள்.

மிகவும் வித்தியாசமான இந்த முறை, மாசுகளையும் கட்டுப்படுத்த உதவும் என்பதால் விரைவில் உலகம் முழுமைக்கும் பரவிவிடும் என்று எதிர்பார்க்கலாம்!

# நினைப்பதைக் கண்டுபிடிக்கலாம்!

"நான் நினைச்சேன் நீ சொல்லிட்டே" என்று பலர் சொல்வதைக் கேள்விப்பட்டு இருப்போம். உடற்கூறு மற்றும் உளவியல் பற்றி படித்தவர்கள் மற்றவர்களின் எண்ண ஓட்டங்களை ஓரளவு கணித்துக் கூறுவார்கள். அதேபோல் உங்கள் எண்ணங்களை கண்டுபிடித்துச் சொல்லும் வகையில் ஒரு கணினி மென்பொருள் (சாப்ட்வேர்) உருவாக்கப்பட்டு உள்ளது.



கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு இந்த மென்பொருளை உருவாக்கி உள்ளது. 'மைண்ட்ஸ் ஐ' என்று பெயரிடப்பட்டு உள்ள இந்த மென்பொருள் நாம் நினைப்பதை புட்டுப்புட்டு வைத்து விடும்.

பலருக்கு வீடியோ காட்சிகளை ஓடவிட்டுக் காட்டி அவர்களின் மூளையின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டது. அப்போது மூளையின் கார்டெக்ஸ் பகுதியில் இந்தக் காட்சிகள் எவ்வாறு பதிகிறது என்பதை மின்னணு சிக்னல் வடிவில் 'டிகோடு' செய்யப்பட்டு கணினியில் பதிவு செய்யப்பட்டது.

ஒருவர் தான் சொல்ல வந்ததை வாய் திறந்து சொல்லாவிட்டாலும் அவர் நினைப்பதை வைத்தே இந்த 'டிகோடு'கள் பதிவாகிவிடும். இதனால் அவர் பேச்சில் ஒன்றும், நினைப்பில் ஒன்றும் வைத்திருந்தால் காட்டிக் கொடுத்துவிடும்.

50 சதவீத அளவில் இந்த எண்ண அலைகள் சரியான விபரங்களைத் தந்தன. மேலும் பலரின் எண்ண அலைகள் பதிவு செய்யப்பட்டு ஆய்வு செய்தால் இதில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும் என்று தெரிகிறது. இதுவரை உண்மையை அறிவதற்காக ஹிப்னாடிசம் அல்லது மின் அதிர்வூட்டும் முறை வழக்கில் இருந்து வருகிறது. இது அதற்கு மாற்று வழியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்க இந்த 'மைண்ட்ஸ் ஐ' மென்பொருள் பெரிதும் கைகொடுக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

"இப்போ நீங்க என்ன நினைக்கிறீங்களோ? அது அந்த கம்பியூட்டருக்கே வெளிச்சம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமியை நெருங்கும் ஆபத்து

மிகப்பெரிய இராட்சத விண்கல் ஒன்று பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. இதைத் தடுத்து பூமியைக் காப்பாற்ற ரஷ்யா முயற்சி மேற்கொண்டுள்ளது.

விண்வெளியில் விண்கற்கள் கோடிக்கணக்கில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் எப்போதாவது சில புவியீர்ப்பு வளையத்திற்குள் வரும்போது பூமியை நோக்கி பாய்ந்துவரும். இந்தக் கற்கள் வரும் வேகத்திலேயே எரிந்து சாம்பலாகி விடும். சில பெரிய கற்கள் மட்டும் தப்பிப் பிழைத்து பூமியில் வந்துவிழும்.

இவை விழுந்த இடத்தில் கல்லின் அளவுக்கேற்ப பள்ளம் ஏற்படுவதுண்டு. அந்த வகையில் தற்போது மிகப் பெரிய விண்கல் ஒன்று பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. இந்த விண்கல்லுக்கு அபோஃபிஸ் (*Apophis*) என்று பெயரிட்டுள்ளனர்.

அபோஃபிஸ் விண்கல் 2029 ஆம் ஆண்டளவில் பூமியிலிருந்து 30,000 கிலோ மீற்றர் தொலைவுக்கு நெருங்கி வரும். அதற்கு அடுத்த 7 ஆண்டுகளில் அதாவது 2036 ஆம் ஆண்டு அது புவிவட்டப் பாதைக்குள் நுழைய வாய்ப்புள்ளதாம். இது நடந்தால் அந்தக் கல் பூமியின் மீது வந்துவிழ வாய்ப்பு மிக அதிகம்.

அபோஃபிஸ் விண்கல்லின் சுற்றளவு 350 மீற்றர் அதாவது 1150 அடி என்று தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல் 1,000,000 தொன் எடை கொண்டதாக இருக்கலாம் என்கிறார்கள்.

இது பூமியின் மீது விழுந்தால் அந்த இடத்தில் பிரான்ஸ் நாட்டின் சைசுக்கு மிகப் பெரிய பள்ளம் ஏற்படும். பல அணு குண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்தால் ஏற்பட்டால் ஏற்படும் அளவுக்கு மாபெரும் சேதம் ஏற்படும்.

இந்தக் கல் கடலில் விழுந்தால் நாம் இதுவரை கேள்விப்பட்டிராத அளவுக்கு கடல்கோள் அலைகள் ஏற்பட்டு மனித குலத்துக்குப் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும்.

எனவே, இந்த விண் கல்லை பூமியில் விழாமல் தடுக்க அமெரிக்கா உள்ளிட்ட பெரிய நாடுகளுடன் இணைந்து ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சிகளில் இறங்கியுள்ளனராம். விரைவில் இது தொடர்பாக ரஷ்ய விஞ்ஞானிகளின் மிகப் பெரிய கூட்டம் கூடவுள்ளது. இது குறித்து ரஷ்ய விண்வெளிக் கழகத்தின் தலைவரான அனடோலி பெர்மினோவ் கூறுகையில்;

விரைவில் எங்களது கழகத்தின் கூட்டம் நடைபெறவுள்ளது. கல் பூமியின் மீது விழாமல் தடுக்க என்ன செய்யலாம் என்பது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது என்றார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்;

இந்தக் கல் பூமியின் மீது வந்து விழுந்தால் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாகும். பல ஆயிரக்கணக்கான ஊர்கள் சாம்பலாகிவிடும்.

இது வந்து விழும் வரை காத்திருக்காமல் அதைத் தடுக்கும் வகையிலான பாதுகாப்பு நடைமுறைகளை சில கோடிகளை செலவழித்து மேற்கொள்வது நல்லது என நாங்கள் கருதுகிறோம். வரும் முன் காத்துக் கொள்ளும் அடிப்படையே இது.

விரைவில் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் விண்வெளி நிபுணர்களுடன் இணைந்து ஒரு ஆய்வுக்கூட்டம் நடக்கவுள்ளது. பூமிக்கு ஏற்படவுள்ள இந்தப் பேரழிவை எப்படி சமாளிப்பது என்பது குறித்து இதில் ஆராயப்படும்.

இந்தக் கல் பூமியில் வந்து விழாமல் தடுக்கும் வகையில் ஒரு பிரமாண்ட ராக்கெட்டை அனுப்பி அதை சிதறடிப்பது அல்லது திசை திருப்புவது அல்லது அந்தக் கல்லுக்குள் வெடி பொருட்களைப் புதைத்து வெடிக்கச் செய்வது எனப்பல யோசனைகள் கூறப்படுகின்றன என்கிறார் அனடோலி.

இது குறித்து அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா கூறுகையில்;

இந்த விண்கல் பூமியின் மீது விழும்போது மிகப் பெரிய அளவுக்கு நாசம் ஏற்படும். எங்களுடைய கணக்குப்படி 2036 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி இந்த விண்கல் பூமியைத் தாக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் பூமியை எரிகல் தாக்கினால் என்ற கற்பனையின் அடிப்படையில் **Armageddon** என்ற ஹொலிவூட் திரைப்படம் வெளியானது.

மைக்கேல் பே இயக்கிய அந்தப் படத்தில் பூமியைக் காக்க புரூஸ் வில்லிஸ் தலைமையில் ஒரு 'டிரில்லர்'கள் குழு எரிகல்லில் தரையிறங்கி அணுகுண்டு வைத்து அதை இரண்டாக உடைத்து பூமி மீது மோதாமல் திசை திருப்பும்.

கிட்டத்தட்ட இந்தக் கதை உண்மையாகிவிடும் போலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள்



**2009** ஆம் ஆண்டு இந்திய கப்டன் தோனி, அவுஸ்திரேலிய கப்டன் பொண்டிங் உள்ளிட்ட நட்சத்திர கிரிக்கெட் வீரர்களுக்கு சிறப்பானதாக அமைந்தது. இது குறித்து ஒரு சிறப்பு பார்வை.

கடந்த ஆண்டு நடந்த ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் இந்திய கப்டன் தோனி, அவுஸ்திரேலிய கப்டன் பொண்டிங் முன்னிலை வகித்தனர். இவர்கள் இருவரும் தலா 29 போட்டியில் பங்கேற்று 1198 ஓட்டங்கள் குவித்தனர். இவர்களைத் தொடர்ந்து கடந்த ஆண்டு நடந்த ஒருநாள் போட்டியில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் மைக்கேல் ஹசி (1166 ஓட்டம்), சிம்பாப்வேயின் மசகட்சா (1087 ஓட்டம்), அவுஸ்திரேலியாவின் ஷேன் வற்சன் (1013 ஓட்டம்), இலங்கையின் டில்ஷான் (1000 ஓட்டம்) ஆகியோர் உள்ளனர்.

**சபாஷ் சமரவீர:** இலங்கையின் சமரவீர (1234 ஓட்டம்), மஹேல ஜெயவர்தன (1194 ஓட்டம்) கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் முதலிரண்டு இடம் பிடித்தார். டெஸ்ட் அரங்கில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் வரிசையில் இங்கிலாந்து கப்டன் ஸ்டிராஸ் (1172 ஓட்டம்), அவுஸ்திரேலியாவின் காடிச் (1111 ஓட்டம்), இலங்கையின் டில்ஷான் (1097), கப்டன் சங்கக்கார (1083 ஓட்டம்), அவுஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் (1042 ஓட்டம்) ஆகியோர் உள்ளனர். இந்தியா சார்பில் டிராவிட் அதிகபட்சமாக 6 டெஸ்டில் பங்கேற்று 748 ஓட்டங்கள் எடுத்தார்.

**ஜான்சன் மிரட்டல்:** அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜான்சன் கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். இவர் கடந்த ஆண்டு 13 டெஸ்ட், 30 ஒருநாள் போட்டியில் விளையாடி முறையே 63,46 விக்கெட் வீழ்த்தினார். இந்தியா சார்பில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் சாதித்த பந்துவீச்சாளர்கள் வரிசையில் ஹர்பஜன் சிங் முன்னிலை வகித்தார். இவர் 6 டெஸ்ட் 26 ஒருநாள் போட்டியில் விளையாடி முறையே 29, 31 விக்கெட் வீழ்த்தினார்.









**பங்களாதேஷ் அசத்தல்**

கடந்த ஆண்டு பங்களாதேஷ் அணி 19 ஒருநாள் போட்டியில் பங்கேற்று 14 வெற்றி, 5 தோல்வியை பதிவு செய்தது. இதன் மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் பங்களாதேஷ் அணி (73.68%) முதலிடம் பிடித்தது. இதனைத் தொடர்ந்து இந்தியா (62.96%), அவுஸ்திரேலியா (62.16%) உள்ளிட்ட அணிகள் உள்ளன.

**ஆஸி.முதலிடம்**

கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய அணி 13 டெஸ்ட் போட்டியில் விளையாடி 7 வெற்றி 3 தோல்வி, 3 'டிராவை' பதிவு செய்தது. இதன்மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் அவுஸ்திரேலிய அணி (53.84%) முதலிடம் பிடித்தது. இதனையடுத்து இந்தியா (50%), இலங்கை (45.45%) அணிகளுள்ளன.




# விம்பிள்டனுக்கு கிடைத்த கௌரவம்

விம்பிள்டன் டெனிஸ் தொடருக்கு புதிய கௌரவம் கிடைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் (2000 முதல் 2009) சிறந்த உணர்வை வெளிப்படுத்திய போட்டிகளுக்கான கருத்து கணிப்பில் விம்பிள்டனுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இக் கருத்துக் கணிப்பை லண்டனை சேர்ந்த 'தி டெலிகிராப்' பத்திரிகை நடத்தியுள்ளது.

உலகின் 'நம்பர்-1' வீரரான சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், இரண்டாம் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபெல் நடால் இருவருக்குமிடையே, 2008ம் ஆண்டு நடந்த விம்பிள்டன் போட்டிக்கு, கருத்துக் கணிப்பில் 17 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளது. 7மணி நேரம் நீடித்த இப்போட்டியில் நடால் 4-6,4-6,7-6,7-6,9-7 என்ற செட் கணக்கில் பெடரரை வீழ்த்தி வென்றார். டெனிஸ் வரலாற்றிலும் இப் போட்டிகள் மிகச் சிறந்ததாக கருதப்படுகிறது.

**இரண்டாவது இடம்;** 2005ம் ஆண்டு இஸ்தான்புல்லில் நடந்த சாம்பியன்ஸ் லீக் போட்டி 15 சதவீத வாக்குகளை பெற்று, கருத்து கணிப்பில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் [illegible] அணி (4-2) 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் ஏ.சி.மிலனை வீழ்த்தியது.

கால்பந்து அரங்கில் மறக்க முடியாத நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. 2004ம் ஆண்டு நடந்த பிரிமியர் லீக் கிண்ணம் போட்டி 13 சதவீத வாக்குகளுடன் மூன்றாவது இடத்தையும் 2003 ஆம் ஆண்டு நடந்த ரக்பி உலகக் கிண்ணப் போட்டி, 11 சதவீத வாக்குகளுடன் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்தக் கருத்துக் கணிப்பில் இடம்பெற்ற ஒரே கிரிக்கெட்டாக 2005 ஆம் ஆண்டு நடந்த ஆஷஸ் கிரிக்கெட் தொடர் இடம்பெற்றுள்ளது. 18 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து அணி 2-1 என்று அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கணிக்கப்பட்ட வீரர்கள்

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.), 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடருக்கான ஏலத்தில் 51 வீரர்களே பங்கேற்கவுள்ளனர். இங்கிலாந்து அணி வீரர்கள் இப்பட்டியலில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். அமைப்பின் சார்பில் மூன்றாவது 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர் மார்ச் 12 ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகிறது. இத் தொடருக்கான வீரர்கள் ஏலம் 19 ஆம் திகதி மும்பையில் நடக்கவுள்ளது. மொத்தமுள்ள 8 அணிகள் ஏலத்தின் மூலம் வீரர்களை ஒப்பந்தம் செய்யவுள்ளன.

**கெய்ன்ஸ் நீக்கம்:**

இந்த முறை மொத்தம் 97 பேர் ஐ.பி.எல். ஏலத்துக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். நியூஸிலாந்து வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் இப்பட்டியலிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். இருப்பினும் இதற்கு ஐ.பி.எல். நிர்வாகம் எந்தக் காரணமும் தெரிவிக்கவில்லை. இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.பி.எல்.) போட்டிகளில் கெய்ன்ஸ் பங்கேற்றது இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

**அதிரடி குறைப்பு:**

மீதமுள்ள 96 பேர்களின் பெயர்களை ஐ.பி.எல். நிர்வாகம் பரிசீலனை செய்தது. வீரர்களின் திறமையை அடிப்படையாகக் கொண்டு 51 பேர் மட்டுமே ஏலத்துக்கு தேர்வாகியுள்ளனர். அதிகபட்சமாக அவுஸ்திரேலியா தரப்பில் 11 வீரர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். தென்னாபிரிக்கா (9 பேர்), மேற்கிந்தியா (8 பேர்), இலங்கை (8 பேர்), பாகிஸ்தான் (7 பேர்), நியூஸிலாந்து (4 பேர்) வீரர்கள் வழக்கம் போல வாய்ப்புப் பெற்றுள்ளனர். பங்களாதேஷ், கனடா, ஹொலண்ட், சிம்பாப்வே தரப்பில் தலா ஒரு வீரர் வாய்ப்புப் பெற்றுள்ளார்.





**இங்கிலாந்து புறக்கணிப்பு:**

இங்கிலாந்து தரப்பில் மொன்டி பனேசர், டிராட் உள்ளிட்ட 8 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். ஆனால் ஒரு வீரருக்கு கூட வாய்ப்புக் கிடைக்கவில்லை. இங்கிலாந்தில் வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி உள்நாட்டு கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இதே சமயத்தில் இந்தியாவில் ஐ.பி.எல். தொடரும் நடக்கிறது. இதனால்தான் இங்கிலாந்து வீரர்கள் ஏலத்தில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. தவிர, இங்கிலாந்து கிரிக்கெட் சபை விதித்த புதிய நிபந்தனைகளும், வீரர்கள் புறக்கணிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

**ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்கவுள்ள வீரர்கள்:**

**அவுஸ்திரேலியா;**

போலிங்கர், பிராட் ஹாடின், பிலிப் ஹியுஸ், ஆஸ்லே நாப்கே, ஜேசன் கிரஜ்ஜா, பென் லாங்லின், கிரஹாம் மானோ, டேமியன் மார்டின், மெக்கேய், ஆடம், வோகஸ் மற்றும் பீற்றர் சிடில்.

**தென்னாபிரிக்கா;**

யூசுப் அப்துல்லா, ஜான் டர்ட் பிரயன், கெம்ப், கிளைன்வெல்ட், பார்னெல், பிலேண்ட்டர், லோன் வேபோ, வான்டர் வேத் மற்றும் வான் ஜார்ஸ் வெல்ட்.

**இலங்கை;**

கண்டம்பி, குலசேகர, பெரேரா, சாமரசில்வா, தரங்க, வீரரத்ன, வெலகெதர மற்றும் சொய்சா.

**மேற்கிந்தியா;**

சுலைமான் பென், டேரன் கங்கா, வேவல் ஹிண்ட்ஸ், கெய்ரன் போலார்ட், கெமர் ரோச், சர்வான், டேரன் பிராவோ மற்றும் சிம்மன்ஸ்.

**பாகிஸ்தான்;**

அப்ரிடி, முகமது ஆமெர், சயீத் அஜ்மல், நவீத் உல்ஹசன், இம்ரான் நசீர், அப்துல் ரசாக் மற்றும் உமர் அக்மல்.

**நியூஸிலாந்து;**

ஷேன் பொண்ட், எலியட், நதன் மெக்கலம் மற்றும் வின்செண்ட்.

**பங்களாதேஷ்;**

சாகிப் அல் ஹசன்

**கனடா;** ரிச்வான் சீமா

**சிம்பாப்வே;** முர்ரே குட்வின்

**ஹொலண்ட்;** ரியான் டென்டஸ்சேட்.

# தலைநகருக்கு ஏற்பட்டுள்ள தலைவலி




டில்லியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பாக அடிக்கடி சர்ச்சை ஏற்படுகின்றது. இங்கு நடக்கவுள்ள பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான கொமன்வெல்த் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் மிகவும் மந்தமாக நடப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது ஒருபுறமிருக்க இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் சமீபத்தில் டில்லி, பெரோஷா கோட்லா மைதானத்தில் நடந்த ஒரு நாள் போட்டி பாதியில் இரத்தானது. இதற்கு மோசமான ஆடுகளம் முக்கிய காரணமாக அமைந்தது. இப்பிரச்சினைகளுக்கு எல்லாம் விளையாட்டு நிர்வாகிகளின் மோசமான அணுகுமுறைகள், கோஷ்டி மோதல்கள், திறமையற்ற செயல்திறன்கள்தான் அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளன.

**கொமன்வெல்த் சர்ச்சை:**

டில்லியில் அக்டோபர் 3 முதல் 14 ஆம் திகதிவரை கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி நடக்கவுள்ளது. இப்போட்டிக்கான தலைமைச் செயலதிகாரியாக நியூஸிலாந்தின் மைக் ஹூப்பர் நியமிக்கப்பட்டார். கொமன்வெல்த் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இந்திய ஒலிம்பிக் குழுத் தலைவர் சுரேஷ் கல்மாடி உள்ளார். மிகப்பெரிய இத் தொடருக்கு புதுடில்லியைத் தயார் செய்ய வேண்டிய இக்கூட்டணி மோதலில் ஈடுபடப் பிரச்சினை வெடித்தது.




கட்டுமானப் பணிகள் மிகவும் மந்தமாக நடந்து வருவதால் விரைவாக முடிக்க சுதந்திரமான கண்காணிப்புக் குழுவை நியமிக்க முடிவு செய்தார் கொமன்வெல்த் கூட்டமைப்புத் தலைவர் மைக்கேல் பெனல். இதற்கு சுரேஷ் கல்மாடி எதிர்ப்புத் தெரிவித்தார். தவிர, தங்கள் பணிகளுக்கு இடையூறாக இருக்கும் போட்டிக்கான தலைமைச் செயலதிகாரி மைக் ஹூப்பரை நீக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதனை மைக்கேல் பெனல் நிராகரித்தார். இதனையடுத்து கல்மாடி, பெனல் இடையே பனிப்போர் நீடித்தது. அதற்குப் பின் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் கில் தலையிட தற்போது ஒரு வழியாக கொமன்வெல்த் போட்டிகளுக்கு டில்லி தயாராகி வருகிறது.

**கிரிக்கெட் சங்கம் மோதல்:**

டில்லி பெரோஷா கொட்லா மைதானத்தில் இலங்கை-இந்திய அணிகள் மோதிய 5 ஆவது ஒருநாள் போட்டி சமீபத்தில் நடந்தது. ஆடுகளத்தில் பந்துகள் தாறுமாற எகிற இலங்கை வீரர்கள் தொடர்ந்து ஆட மறுத்தனர். இதையடுத்து மோசமான ஆடுகளம் காரணமாக இப்போட்டி இரத்துச் செய்யப்பட்டது. இந்தச் சூழலில் டில்லி கிரிக்கெட் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டம் நடந்தது. இதில் இரு கோஷ்டிகளுக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. மோசமான ஆடுகளம் காரணமாக கேள்வியெழுப்பிய மூத்த உறுப்பினர் கீர்த்தி ஆசாத் அவமதிப்புக்குள்ளானர். இதற்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்.

**சேவாக் எதிர்ப்பு:**

டில்லி கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகிகளுக்கிடையே அடிக்கடி பிரச்சினை வெடித்து வருகிறது. இச் சங்கத்தில் விளையாட்டுக் குழு என ஒரு அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பிலிருக்கும் ஒரு சிலர்தான் ரஞ்சி கிண்ணம் உள்ளிட்ட தொடர்களில் வீரர்களைத் தெரிவு செய்கின்றனர். இவர்களின் சிபாரிசின் அடிப்படையில் அணியில் வீரர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதற்கு டில்லி அணியின் முன்னணி வீரர் சேவாக்கும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இப்பிரச்சினை கடந்த சில மாதங்களுக்கு முன்பு பரபரப்பாகப் பேசப்பட்டது. இப்படி நிர்வாகிகள் ஒருவருக்கொருவர் கோஷ்டி மோதலில் ஈடுபட்டு மைதானப் பராமரிப்பில் கோட்டை விட்டனர். விளைவு 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் நடக்கும் இடங்களிலிருந்து டில்லி நீக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அடுத்தடுத்து விளையாட்டுத் தொடர்பாக டில்லியில் நடக்கும் பிரச்சினை தலைநகருக்கு தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிலிருந்து பிரான்ஸை நோக்கி பயணித்த விமானத்தில் 'பிக்பொக்கட்'

ஜப்பானிலிருந்து பிரான்ஸை நோக்கி வந்துகொண்டிருந்த விமானத்தில் பயணிகளிடம் பிக்பொக்கட் அடிக்கப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானிலிருந்து பிரான்ஸை நோக்கி வந்துகொண்டிருந்த எயார் பிரான்ஸ் விமானத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றிருப்பதுடன், இச் சம்பவம் குறித்த விசாரணைகள் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் பயணித்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே இவ்வாறு பிக்பொக்கட் அடிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான யூரோ களவாடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாக பிரான்ஸின் தலைநகர் பாரிஸிலுள்ள சார்ள்ஸ் டி கௌல் விமான நிலையத்தின் எல்லைக் காப்பு பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விமானம் இரவு வேளையில், பறந்து கொண்டிருந்த சமயம் வர்த்தக வகுப்பில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது 5 பயணிகளிடமிருந்து 4 ஆயிரம் யூரோ பணம் பிக்பொக்கட் அடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உறக்கத்திலிருந்து விழித்த பயணியொருவர் தனது பணம் திருட்டுப் போனதை அறிந்து கொண்டார். இப்பயணியின் கைப்பையிலிருந்த முழுப் பணமும் திருட்டுப் போயிருந்தது.

இதனைத் தொடர்ந்து இச் சம்பவம் குறித்து விமானத்தின் சிப்பந்திகளுக்கு அறிவிக்கப்பட்டது.


இதனைத் தொடர்ந்து விமானி மூலம் பிரான்ஸில் விமானம் தரையிறங்கும் விமான நிலையப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு உஷார் நிலைப்படுத்தப்பட்டனர்.

ஆனால், இச்சம்பவம் குறித்து இதுவரை எவரையும் கைதுசெய்ததாகச் செய்திகள் வெளியாகவில்லை.

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

## உறைபனியில் சிக்கித் தவிக்கும் ஐரோப்பா; இயல்பு வாழ்க்கை பாதிப்பு



உலகின் பெரும்பாலான நாடுகளில் தற்போது பனிப்பொழிவால் குளிரான காலநிலை நிலவுகிறது.

ஆனால், ஐரோப்பாவிலோ உறைபனி பொழிகிறது. வீடுகள் மற்றும் வீதிகள் என்பன முழங்கால் அளவு பனிப்படலத்தால் மூடிக் கிடக்கின்றன.

வீதிகளை பனிப்படலங்கள் ஆக்கிரமித்துள்ளதால் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

மில்லியன் கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

போலந்தில் மைனஸ் 25 பாகைக்கு வெப்பநிலை நிலவுவதால் இங்கு புத்தாண்டு கொண்டாட்டங்கள் களைகட்டவில்லை. புத்தாண்டு தினத்தில் மட்டும் இங்கு பனியால் 13 பேர் பலியாகியுள்ளனர்.

ஐரோப்பா முழுவதும் கடும் குளிர் மற்றும் உறைபனிக்கு 122 பேர் பலியாகியுள்ளனர்.

சுவிற்சார்லாந்தின் அல்ப்ஸ் மலையிலிருந்து பனிப்பாறைகள் அடிக்கடி கீழே உருண்டு விழுகின்றன. இதில் பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்தவர்கள் பலர் பலியாகியுள்ளனர்.

மேலும் பனிச்சறுக்கலில் ஈடுபட்டிருந்த பலர் காணாமல் போயிருப்பதாகவும் இவர்கள் உறைபனிக்குள் சிக்கியிருக்கலாமென அஞ்சப்படுவதால் இவர்களைத் தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

பிரிட்டனின் வடக்கு மற்றும் மத்திய பகுதியிலும் கடும் உறைபனி கொட்டுகிறது.

அதிவேக ரயில் சேவைகள் அனைத்தும் காலதாமதமாகியே குறிப்பிட்ட இடத்தை அடையும் அதேவேளை, பல விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வீதிகளில் பனிப்படலங்கள் நிறைந்துள்ளமையினால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி காரணமாக வேலையிலிருந்து வீடு திரும்பும் நூற்றுக்கணக்கானவர்கள் தமது கார்களிலேயே இரவுகளைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உறைபனியால் விபத்துகளில் சிக்குவோரைச் சிறப்பாகக் கையாள்வதற்காக மருத்துவமனைகள் யாவும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பா தவிர ஆசியாவின் சீனா மற்றும் கொரியப் பிராந்தியத்திலும் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதுடன், இங்கும் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஞாபக மறதி போன்ற நோய்களிலிருந்து மூளையைப் பாதுகாக்கும் செல்போன் பாவனை



மூளையைப் பாதிக்கும் குழப்பநிலை மற்றும் ஞாபக மறதி போன்ற நோய்கள் செல்போன் பாவனை மூலம் தடுக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

செல்போன் பாவனை போன்ற இலத்திரனியல் சாதனங்களிலிருந்து வெளிவரும் மின்காந்த அலைகள் இவ்வாறான நோய்த் தாக்கத்திலிருந்து மூளையைப் பாதுகாப்பதாக நீண்டகாலமாக எலிகளை வைத்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இவ் ஆராய்ச்சிகளின் முடிவுகள் அதிர்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் செல்போன் பாவனை மூலம் இவ்வாறான நோய்த் தாக்கம் தடுக்கப்படுவதுடன், இவ்வாறான நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டவர்களை மருந்து, மாத்திரைகளின்றி குணப்படுத்தும் சிகிச்சைக்கான வழிமுறையும் செல்போன் பாவனையில் இருப்பதாக இவ் ஆய்வு தெரிவிக்கின்றது.

செல்போனிலிருந்து வெளியேற்றப்படும் மின்காந்த அலைகள் நபரொருவரின் தலைப் பகுதிக்கெதிராக நாளாந்தம் இரு மணித்தியாலங்கள் வீதம் ஏழு தொடக்கம் ஒன்பது மாதங்களுக்கு வெளியிடப்படுமானால் அதன் சக்தியின் ஞாபக மறதி போன்ற மூளை நோய்கள் உருவாவதற்கு காரணியாக அமையும் கலங்கள் அழிக்கப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூளையிலுள்ள தேவையற்ற புரதங்களை அகற்றுவதற்கு மின்காந்த அலைகள் உதவுவதுடன், இதன் மூலம் நரம்பியல் விஞ்ஞானம் புதியதொரு துறைக்குள் அடியெடுத்து வைத்துள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூவரில் எவர் முதற் பெண்மணி?

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாகோப் சூமோவின் மூன்று மனைவிமார்களில் எவருமே 'முதற் பெண்மணி' அந்தஸ்துக்கு போட்டியிடமாட்டார்கள் என்று ஜனாதிபதியின் செயலகம் அறிவித்திருக்கிறது.

முதற் பெண்மணி என்ற அந்தஸ்துக்கான ஏற்பாடு எதுவுமே தென்னாபிரிக்க அரசியலமைப்பில் கிடையாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி சூமோ ஐந்தாவது தடவையாகத் திருமணம் செய்து கொண்டதையடுத்து தற்போது அவருடன் வாழும் மூன்று மனைவிமாரில் எவர் முதற்பெண்மணியாகக் கருதப்படுவார் என்ற ஊகங்கள் ஊடகங்களில் வெளியாகத் தொடங்கின.

'முதற் பெண்மணிக்கான அந்தஸ்துக்கோ அல்லது முதற் பெண்மணிகளுக்கான அந்தஸ்துக்கோ தென்னாபிரிக்கா அரசியலமைப்பில் எந்த ஏற்பாடுமே இல்லை. அத்தகைய பதவி எதுவுமே கிடையாது. உத்தியோகபூர்வ வைபவங்களில் அல்லது பொது வைபவங்களில் ஜனாதிபதி சூமோ மூன்றுமனைவியரில் எவரையாவது அல்லது மூன்று பேரையும் கூட்டிச் செல்லலாம். அது அவரின் விருப்பத்தைப் பொறுத்தது' என்று ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்காவில் பலதார மணங்கள் அனுமதிக்கப்படுகின்றன. சூமோ தென்னாபிரிக்காவின் 'சுலு' பூர்வீக இனத்தைச் சேர்ந்தவர். இந்த இனத்தவரின் பல கலாசாரத்தில் பலதார மணங்கள் ஒரு அங்கமாகும். ஆனால், உலகில் எயிட்ஸ் நோயினால் கடுமையாகப்பாதிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று என்பதால் பலதாரமணங்கள் குறித்து எயிட்ஸ் நோய் தடுப்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

தற்போது உள்துறை அமைச்சராக இருக்கும் என்கோசாசனா லாமினி-சூமோவை ஜனாதிபதி முன்னர் திருமணம் செய்திருந்தார். ஆனால், இருவரும் 1998 ஆம் ஆண்டில் விவாகரத்துச் செய்துகொண்டார். 2000 ஆம் ஆண்டில் இன்னொரு மனைவி தற்கொலை செய்து கொண்டனர். பலமனைவியரைக் கொண்டிருக்கும் தனது தீர்மானத்தை சூமோ எப்போதும் நியாயப்படுத்தியே வந்திருக்கிறார்.

சூமோவுக்கு 19 பிள்ளைகள் இருக்கிறார்கள். இன்னொரு பெண்மணிக்கும் அவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்திருப்பதாகவும் ஜனாதிபதியின் இணையத்தளத்தில் உள்ள சுயசரிதையின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

# நீண்ட ஆயுளுக்கும் எமது பெயருக்கும் என்ன தொடர்பு?

ஆயுளுக்கும் பெயருக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதாக அமெரிக்காவின் டிற்றோயிட்டில் உள்ள வெய்ன்ஸ் ரேற் பல்கலைக்கழகத்தில் கல்விமான்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.


உங்களது பெயரின் முதல் எழுத்தைப் பொறுத்து உங்கள் ஆயுட்காலம் அமைந்திருக்குமாம்.

உங்களின் முதற்பெயர் அ யில் தொடங்குமானால் முதற்பெயர் ஈ யில் தொடங்குபவரை விடவும் நீங்கள் 10 வருடங்கள் கூடுதலாக வாழ்வீர்கள் என்று ஆய்வை மேற்கொண்டவர்கள் கூறுகிறார்கள்.

அ என்பது வெற்றிக்கும் ஈ என்பது தோல்விக்கும் உரியதாகிறது. ஈ யில் பெயர் தொடங்குபவர்கள் பொதுவில் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவே இருப்பர். இவர்களுக்கு புற்றுநோய் மற்றும் அதுபோன்ற ஆபத்தான நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

முதற்பெயர்கள் உ தொடக்கம் நூ வரையுள்ள எழுத்துகளில் தொடங்குபவர்களை விடவும் ஈ பெயர் கொண்டவர்கள் குறைந்த காலமே உயிர் வாழ்வர்.

பெயர்களுக்கு இத்தகையதொரு முக்கியத்துவம் இருப்பதாக யாருமே முன்னர் நினைத்ததில்லை. ஆனால், தற்போதைய ஆய்வு அந்த நிலைமையை முற்றாக மாற்றிவிட்டிருக்கிறது என்று மான்செஸ்டர் மெற்றோபோலிடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி டேவிட் றோம்ஸ் தெரிவித்திருக்கிறார்.



இப்பத்திரிகை நொதேர்ன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 339ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org